2012 –ஆம் ஆண்டு U.S.A. மாநாட்டில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரை தொடர்ச்சி... பக்கம் 4

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு பக்கம் 13

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை பக்கம் 17

இஸ்முஹூ அஹ்மது என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் தொடர்ச்சி... பக்கம் 19



மாத இதழ்


# ....நுபுவ்வத் வழி....


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | January 2022 | Issue No. 2



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





முபாரக் பள்ளிவாயில், இஸ்லாமாபாத், இலண்டன்



# திருக்குர்ஆன்

وَسَارِعُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمٰوٰتُ وَالْاَرْضُ ۙ اُعِدَّتْ لِلْمُتَّقِيْنَ

மேலும் நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின் பக்கமும் வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோர்க்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சுவர்க்கத்தின் பக்கமும் விரைந்து செல்லுங்கள். (3:134)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَنْ آمَنَ بِاللهِ وَبِرَسُولِهِ، وَأَقَامَ الصَّلَاةَ، وَصَامَ رَمَضَانَ كَانَ حَقًّا عَلَى اللهِ أَنْ يُدْخِلَهُ الْجَنَّةَ، جَاهَدَ فِي سَبِيلِ اللهِ أَوْ جَلَسَ فِي أَرْضِهِ الَّتِي وُلِدَ فِيهَا، فَقَالُوا: يَا رَسُولَ اللهِ، أَفَلَا نُبَشِّرُ النَّاسَ؟ قَالَ: إِنَّ فِي الْجَنَّةِ مِائَةَ دَرَجَةٍ، أَعَدَّهَا اللهُ لِلْمُجَاهِدِينَ فِي سَبِيلِ اللهِ، مَا بَيْنَ الدَّرَجَتَيْنِ كَمَا بَيْنَ السَّمَاءِ وَالأَرْضِ، فَإِذَا سَأَلْتُمُ اللهَ، فَاسْأَلُوهُ الفِرْدَوْسَ، فَإِنَّهُ أَوْسَطُ الجَنَّةِ وَأَعْلَى الجَنَّةِ - أُرَاهُ قَالَ وَ فَوْقَهُ عَرْشُ الرَّحْمَنِ، وَمِنْهُ تَفَجَّرُ أَنْهَارُ الجَنَّةِ-

(صَحِيْحِ البُخَارِيْ كِتَابُ الْجِهَادِ وَالسِّيَرِ بَابُ دَرَجَاتِ الْمُجَاهِدِينَ فِي سَبِيلِ اللهِ)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''எவர் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டு தொழுகையை நிலைநாட்டி ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பாரோ அவரை சுவர்க்கத்தில் நுழையச் செய்வதாக அல்லாஹ் வாக்குறுதி அளிக்கின்றான். அவர் இறைவழியில் முயற்சி செய்தாலும் அல்லது அவர் பிறந்த வீட்டில் அமர்ந்திருந்தாலும் சரியே என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியபோது சஹாபிகள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த நற்செய்தியை மக்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று கேட்ட போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுவர்க்கத்தில் நூற்றுக்கணக்கான படித்தரங்கள் உள்ளன. அவை அல்லாஹ்வின் வழியில் முயற்சி செய்பவர் –களுக்காக அல்லாஹ்வால் தயார் செய்யப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் இடையிலான தூரம் வானம் பூமிக்கு இடையிலான தூரத்தைப் போன்றதாகும். எனவே நீங்கள் அல்லாஹ்விடம் மன்றாடிக் கேட்கும்போது ஃபிர்தவ்ஸ் என்னும் சொர்க்கத்தை வேண்டுங்கள். ஏனெனில் அது சுவர்க்கத்தின் மையப்பகுதியில் அமைந்ததும் மிக உயர்ந்ததுமாகும். அதன் மீதே அளவற்ற அருளாளனின் அரியாசனம் அமைந்துள்ளது. மேலும் அதிலிருந்தே சுவர்க்கத்தின் ஆறுகள் உருவாகின்றன.'' (புகாரி)

# புத்தாண்டு சிந்தனைகள்

ஓர் ஆண்டு முடிந்து அடுத்த ஆண்டு துவங்கும் போது அதனை கவனமற்ற நிலையில் விட்டு விடக் கூடாது என்றும் அதனை கவனத்திற் கொண்டு நாம் எதையாவது செய்ய வேண்டும் என்றும் மக்கள் இயல்பாகவே விரும்புகிறார்கள். இந்த விருப்பம் பல்வேறு சமுதாய மக்களிடத்தில் அவர்கள், மார்க்கத்தைச் சார்ந்திருந்தாலும் சரி, மார்க்கத்தைச் சாராதவர்களாயிருந்தாலும் சரி பல்வேறு விதங்களில் வெளிப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் நிலை எப்படி இருக்க வேண்டும்?



நம்பிக்கையாளரைப் பொறுத்த வரை அவர் சென்ற ஆண்டையும் வரக்கூடிய ஆண்டையும் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீரைப் போன்று பார்க்கின்றார். அது ஒவ்வொரு நொடிப் பொழுதும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதில் பல திருப்பங்களும் காட்சிகளும் மாறி வரலாமே தவிர நம்பிக்கையாளரின் நிலை முன்பை விட தரம் குறைந்து விடும் அளவிலான எந்த செயலையும் புத்தாண்டு வரவு அவரை மாற்றி விடுவதில்லை.

இந்த வகையில் காலங்கள் மாறுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டிய விஷயங்கள் எல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி திருக்குர்ஆனில் கூறப்பட்ட படியே இருக்க வேண்டும். அதாவது وَلَلْآخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْأُولَىٰ - எல்லாருடைய வாழ்வும் கடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆரவாரத்துடன் கழிந்து கொண்டிருக்கிறது. எந்த வாழ்க்கையும் ஒரே இடத்தில் ஸதம்பித்து நிற்கவில்லை. வாழ்வு என்பது இயக்கமில்லாததாக - நிலைபெற்ற ஒன்றாக இருக்கவே முடியாது. ஏனெனில் இயக்கமின்மை என்பது மரணத்திற்குரிய பெயராகும். ஆகவே ஒவ்வொரு பொருளும் இயங்கிக் கொண்டிருக்கிறது. முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆயினும் முஹம்மது (ஸல்) அவர்களே! உமது வாழ்க்கை எப்படி முன்னேறுகிறதென்றால் உமது வருங்கால ஒவ்வொரு வினாடியும் சென்ற கால வினாடிகளை விட முன்னேற்றப் பாதையில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த ஒரு அளவுகோலைத்தான் பண்புகளின் அளவுகோல் என்று நாம் குறிப்பிட முடியும். மனிதன் இந்த அளவுகோலின்படி இறைவனைப் பார்க்கும் போதுதான் அவனுடைய எல்லாப் பண்புகளும் இந்த அளவுகோலுக்கேற்ப அமைந்துள்ளன என்பதை கண்டுகொள்கிறான். இறைவனிடம் மாறுதல்கள் ஏற்படுவதில்லைதான். ஆயினும் அவன் படைத்த அண்ட சராசரங்களில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அவை குறைந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலையை நோக்கி இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆக, இறைவனின் ருபூபிய்யத் (படைத்து வளர்த்து காத்தோம்பும் பண்பு) பற்றிய கருத்தைத்தான் இந்த இறைவசனத்திலிருந்து நாம் புரிய முடிகிறது. மனிதனுடைய சக்திக்குட்பட்டிராமல் சுயமாகவே வெளிப்படும் அண்ட சராசரங்களின் வெளிப்பாடுகள் எல்லாம் தம் சென்ற வினாடியை விட வருங்கால வினாடிகளில் முன்னேறிக் கொண்டு தான் செல்கின்றன......

இறைவன் அளித்த பகுத்தறிவைப் பயன்படுத்தி தம் ஒவ்வொரு வினாடியையும் சென்ற கால வினாடிகளை விட சிறந்ததாக ஆக்கியவர்களுள் முதன்மையானவராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளங்குகிறார்கள்.....

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு வினாடியையும் கணக்கிட்டுப் பார்த்தார்கள். கவனமற்று இருப்பவர்களுக்கும் அறிவாளிக்கும் இடையில் இது ஒரு பெரிய வித்தியாசம் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வினாடிக்கு வினாடி கணக்குப் பார்த்து வந்தார்கள். தம் வாழ்வின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் கண்காணித்து வந்தார்கள். நாம் ஆண்டில் ஒருமுறை கூட கணக்கு பார்க்கவில்லை என்றால், ஏன் பத்தாண்டுகளில் ஒரு முறை கணக்கு பார்க்கவிவ்லை என்றால் இவர்களைப் பற்றித் தான் 'கவனமற்றவர்கள்' என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. நரகத்தின் பெரும் பகுதி கவனமற்றவர்களாக இருந்தவர்களால் நிரம்பியிருக்கும்' எனவும் இறைவன் கூறுகிறான்.

அவர்கள் கவனமற்றவர்கள் என்றால் கவனமற்ற நிலையில் செய்த தம் பாவங்களுக்காக அவர்கள் ஏன் தண்டனை பெற வேண்டும்? என்ற கேள்வியும் எழுகிறது. உண்மையில் கவனமற்ற நிலை மனிதன் வேண்டுமென்றே காட்டிய பலவீனங்களின் காரணமாக உருவாகியிருக்கும் என்றால் அதற்கு தண்டனை கிடைக்கும். நாங்கள் கவனமற்று இருந்தோம் என்று கூறி தப்பிக்க முடியாது....

நீங்கள் உங்கள் கவனமற்ற நிலையில் கண்காணிப்பவர்களாக இல்லையென்றால், கவனமற்ற நிலையில் வாழ்நாளைக் கழிக்கின்றீர்கள் என்றால், அதில் ஏற்படும் சம்பவங்களுக்கு நீங்களே பொறுப்பாளிகளாவீர்கள்....

எப்படியாவது இந்த கவனமற்ற நிலை மாற வேண்டும் என்பதற்கு நீங்கள் கடும் முயற்சி செய்ய வேண்டும். அது ஒரு நிரந்தர போராட்டமாகும். இதனால் அவன் காலடிகளை மிக வேகமாக எடுத்து வைக்கவில்லை என்றாலும் மனிதன் கொஞ்சத்திற்கு கொஞ்சமாவது முன்னோக்கிச் செல்ல வேண்டும். இது பற்றி ஒப்பாய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும். இதற்காகத்தான் உங்கள் பேரேட்டைத் திறந்து இதுவரை என்ன நடந்துள்ளது என்பதைப் பாருங்கள் என்று கூறுகிறேன்.

சென்ற ஆண்டில் உங்களின் நிலை எதுவாக இருந்தாலும் அதனை கவனியுங்கள். அதில் உங்களது நிலைமைகளை அளந்து பார்த்து நமது சென்ற ஆண்டில் உள்ள ஒவ்வொரு வினாடியை விட இவ்வாண்டில் உள்ள ஒவ்வொரு வினாடியும் சிறப்பாக அமையவில்லை என்றாலும் ஒவ்வவொரு நிமிடமும் மிகச் சிறந்ததாக அமையுமென்றால் அதை சிறந்ததாக்கி காட்ட வேண்டும். அல்லது ஒவ்வொரு மணி நேரமும் மிகச் சிறந்ததாக அமையுமென்றால் அதை சிறந்ததாக்கிக் காட்ட வேண்டும். வாரங்களை கணக்கிடுங்கள். மாதங்களை கணக்கிடுங்கள். கொஞ்சமாவது செய்யுங்களேன்...

(ஹஸ்ரத் நான்காவது கலீஃ.பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் 03.01.1997 -ல் ஆற்றிய ஜுமுஆ உரையிலிருந்து)

# 2012 ஆம் ஆண்டு U.S.A. ஆண்டு மாநாட்டில் மகளிர் அரங்கில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரை

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

மக்கள் வெளிப்படையாகச் செய்யும் செயல்கள் உலகத்தின் பார்வையில் ஒன்றாகத் தெரியும். ஆனால் உண்மையில் அது வேறொன்றாக இருக்கும். இருப்பினும், உண்மை என்னவெனில், முஸ்லிம் ஆண்களும், பெண்களும் அவர்களது உள்ளத்தில் உள்ளதைப் போன்றே வெளிப்படையாகவும் நடந்து கொண்டால் மட்டுமே நம்பிக்கை கொண்டவர்கள் எனக் கருதப்படுவர். மேலும் ஒவ்வொரு சொல்லும், செயலும் இறை நேசத்தைப் பெறுவதற்காக மட்டுமே இருக்க வேண்டும்.

திருக்குர்ஆனின் போதனைகளே நமது வாழ்வினை வழிநடத்த வேண்டும் என்று முக்கியமான கட்டளையை அல்லாஹ் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம் இந்தக் கட்டளையை ஏற்று நடக்குமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்கள். திருக்குர்ஆனை ஒரு முழுமையான வழிகாட்டியாக எடுத்துக் கொள்வதாக எல்லா முஸ்லிம்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வாக்குறுதியும் அளித்துள்ளனர். எல்லா முஸ்லிம்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்போதனைகளை தமது வாழ்விற்கு வழிகாட்டும் நடத்தை விதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதைப் போன்று அல்லாஹ்வின் கட்டளைகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகள் ஆகியவற்றுள் சிலவற்றை மட்டும் முக்கியமானவையாக எடுத்துக் கொண்டு அவற்றை வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வைத்துக் கொள்ளலாம் என்று எங்கேயும் கூறப்படவில்லை. உண்மையில் அல்லாஹ்வுடைய, அவனது தூதருடைய ஒவ்வொரு கட்டளையையும் நமது வாழ்க்கைக்கான வழிகாட்டியாக எடுத்துக் கொண்டு, அதன்படி செயல்பட நம்மால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். உண்மையில், வாழ்த்துக்குரிய முன்மாதிரியாகத் திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு சொல்லையும், ஒவ்வொரு செயலையும் நாம் பின்பற்ற வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையினை நீங்கள் பார்த்தால், அல்லாஹ்வுக்கும் அவனது படைப்பினத்திற்கும் செலுத்த வேண்டிய உரிமைகளைப் பற்றி தம்மைப்




பின்பற்றுபவர்களிடம் அவர்கள் உணர்த்தாத எந்த நொடிப் பொழுதும் இல்லை என்பதை அறியலாம்.

அல்லாஹ்வுக்குரிய உரிமைகளுள் மிகவும் முதன்மையானது தொழுகையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையில் உள்ளது எனக் கூறியுள்ளார்கள். எனவே அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியவாறு நமது கண்களின் குளிர்ச்சிக்காக இந்த வழிமுறையை நாம் தேட வேண்டும். தொழுகையின் தேவைகள் நீங்கள் அவசரப்பட்டு அதனை நிறைவேற்றுவதன் மூலமோ, அந்த அசைவுகள் மட்டும் செய்து விடுவதன் மூலமோ நிறைவு பெறாது. இத்தகைய தொழுகைகள் நமது கண்களுக்கு குளிர்ச்சியாக ஒருபோதும் ஆக முடியாது. எந்தத் தொழுகைகள் முறைப்படியும் அழகாகவும் தொழப்படுகின்றதோ, எந்தத் தொழுகைகளின் அசைவுகளில் முழுமையான பணிவும் இறை நேசமும் இணைந்திருக்குமோ அத்தகைய தொழுகைகளே மகிழ்ச்சிக்கும் நிம்மதிக்கும் வழிகோலும். அதனாலேயே நமது கண்களுக்குக் குளிர்ச்சி கிடைக்கும்.

உங்கள் அனைவருக்கும் தெரியும். நமது குழந்தைகளுக்காக ஒரு துஆ உள்ளது. அது என்னவெனில், அல்லாஹ்வே! அவர்களை எங்களது மகிழ்ச்சிக்குக் காரணமாகவும், எங்களது கண்களுக்குக் குளிர்ச்சியாகவும் ஆக்கி வைப்பாயாக! ஒரு நம்பிக்கை கொண்டவருக்கு அவரது குழந்தைகள் இறையச்சத்தை மேற்கொள்ளும்போது அவரது கண்களுக்கு குளிர்ச்சி கிடைக்கிறது. அவர்கள்

ஆரோக்கியத்துடனும், வனப்புடனும் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு நடக்கும்போது அவர்களது கண்களுக்குக் குளிர்ச்சி கிடைக்கிறது. எனவே ஓர் ஆணோ அல்லது பெண்ணோ இறையச்சமிக்க, உண்மையான, கண்களுக்குக் குளிர்ச்சி தருகிற குழந்தையை தர வேண்டி அல்லாஹ்விடம் துஆ செய்யும் போது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியவாறு கண்களுக்கு குளிர்ச்சி தருகிற வழியையும் தேட வேண்டும். அது அல்லாஹ்வை வணங்குவதில் உரிமைகளை நிறைவேற்றுவதன் மூலமே கிடைக்கும். இது நடைபெறும் போது இறையச்சமிக்க, பெற்றோரின் கண்களுக்குக் குளிர்ச்சியும், மகிழ்ச்சியும் தருகிற குழந்தைகளை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குகிறான்.

எனவே தமது குழந்தைகளின் தர்பிய்யத்திற்காக பெண்கள் தமது தொழுகையின் தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும். அதனை நிலை நிறுத்தவும் வேண்டும். அஹ்மதிகளின் வீடுகள் இறை நேசத்தாலும், திக்ரே இலாஹியாலும் எப்போதும் நிரம்பி காணப்பட வேண்டும். எனது முந்தைய இரண்டு குத்பாக்களில் நான் கூறியபடி, டி.வி நிகழ்ச்சிகளோ, இன்டர்நெட் அல்லது குடும்பத்துடன் வெளியில் செல்வது ஆகியவற்றிற்கு முன்னுரிமை தரப்பட்டு நமது தொழுகைகளை அழகுடன் நிறைவேற்றுவதற்கு தடைகளாக அவை இருக்கக் கூடாது. பெண்கள் மட்டுமல்ல; ஆண்கள் அனைவரும் கூட இறைவனுக்குச் செலுத்த வேண்டிய இறை வணக்கத்தின் உரிமைகளை நிறைவேற்றுவதில் முழு கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு தொழுகைக்கான உரிமைகளை நிறைவேற்றுவதில் முழு கவனம் செலுத்தப்பட்டால், உங்கள் குழந்தைகள் உங்கள் கண்களுக்குக் குளிர்ச்சியானவர்களாக இருப்பர் என்று அல்லாஹ் வாக்குறுதி தந்துள்ளான்.

தொழுகையின் முக்கியத்துவத்தைக் குறித்து திருக்குர்ஆனின் சூரா பகராவில் அல்லாஹ் கூறுகின்றான்:

حٰفِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى ۗ وَقُوْمُوْا لِلّٰهِ قٰنِتِيْنَ

தொழுகைகளை – குறிப்பாக நடுத்தொழுகையைக் கண்காணித்து வாருங்கள். மேலும் அல்லாஹ்வின் முன் கட்டுப்பட்டவர்களாக பணிவுடன் நில்லுங்கள். (2:239)

இந்த வசனம் நீங்கள் உங்கள் தொழுகைகள் மீது கவனம் செலுத்தி அவற்றைப் பாதுகாத்து வர வேண்டும் எனக் கூறுகிறது. குறிப்பாக இந்த வசனம் பகலில் வேலைகளுக்கு மத்தியில் வருகிற தொழுகையைக் குறித்துக் கூறுகிறது. அப்போது நாம் நமது அன்றாட வேலைகளில் மூழ்கி இருப்போம். எனவே எல்லா உலக விருப்பங்களும். ஆசைகளும் பின்னால் தள்ளப்பட்டு, தொழுகைகள் பாதுகாக்கப்பட்டால் நமது வீடுகள் அல்லாஹ்வின் பரக்கத்தால் நிரப்பப்படும் என்று இவ்வசனம் நமக்கு நினைவூட்டுகிறது. அப்போது இறையச்சமும், நன்மையும் நமது குழந்தைகளிடம் நிரந்தர அம்சங்களாகி விட்டதை நாம் அறிந்து கொள்வோம். இத்தகைய உயர் தரத்தை நீங்கள் அடையும்போது தான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவோம் என்ற உறுதிமொழியை நீங்கள் நிறைவேற்றியவர்கள் ஆவீர்கள். மனிதனின் நற்செயல்களுக்கு கூலி வழங்கும்போது அவற்றை விட மிக அதிகமாக வழங்குவதில் அல்லாஹ் மிகவும் தாராளமானவனாவான். எனவே நீங்கள் உங்கள் தொழுகைகளைப் பாதுகாக்கும் போது இறைக் கட்டளையைப் பேண வேண்டும் என்ற விருப்பத்தில் அவ்வாறு செய்யும் போது அதைப் போன்று உங்கள் கணவரிடமும் பிள்ளைகளிடமும் தொழுகைகளைப் பாதுகாக்குமாறு நீங்கள் நினைவூட்டி வரும்போது உங்கள் தொழுகைகள் உண்மையில் உங்களைப் பாதுகாக்கும். அவை உங்களைப் பாவங்களை விட்டும், தவறுகளை விட்டும் தூய்மைப்படுத்தும்.

அல்லாஹ் சூரா அன்கபூத்தில் கூறுகிறான்:

اِنَّ الصَّلٰوةَ تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ ؕ நிச்சயமாக தொழுகை ஒருவரை வெட்கக் கேட்டிலிருந்தும் வெளிப்படையான தீமையிலிருந்தும் தடுக்கிறது. (29:46)

இதன் பொருள் என்னவெனில், தொழுகைகள் ஒருவரை எல்லா விதமான தீய செயல்களிலிருந்தும், விரும்பத்தகாத செயல்களிலிருந்தும் பாதுகாக்கிறது. எனவே தொழுகைகளைத் தொடர்ச்சியாகவும், முறைப்படியும் நாம் தொழுது வரும்போது, தொழுகைகளே நம்மை வெட்கக் கேடான தீய செயல்களிலிருந்து பாதுகாக்கிறது. இந்த ஆன்மீகக் கேடயமானது தனி நபரை மட்டுமல்ல; முழு குடும்பத்தையுமே பாதுகாக்கிறது. இறை வணக்கத்தை முழு கவனத்துடன் அதன் அனைத்து உரிமைகளையும் பேணியவாறு நிறைவேற்றுபவரின் நண்பனாகவும், உதவியாளனாகவும் அல்லாஹ் ஆகி விடுகிறான். இறை வணக்கத்தின் உரிமைகளைப் பேணுதல் என்பதன் பொருள் ஒருவர் எல்லா நேரமும் மகிழ்ச்சியான, வசதியான, வளமான நேரத்திலும் இறைவனை வணங்க வேண்டும் என்பதாகும். நிம்மதியான நேரத்திலும் இறைவனை வணங்க வேண்டும். அவனை முறைப்படி நினைவு கூர வேண்டும். சோதனையான கஷ்டமான காலத்தில் மட்டும்

> மக்கள் வெளிப்படையாகச் செய்யும் செயல்கள் உலகத்தின் பார்வையில் ஒன்றாகத் தெரியும். ஆனால் உண்மையில் அது வேறொன்றாக இருக்கும். இருப்பினும், உண்மை என்னவெனில், முஸ்லிம் ஆண்களும், பெண்களும் அவர்களது உள்ளத்தில் உள்ளதைப் போன்றே வெளிப்படையாகவும் நடந்து கொண்டால் மட்டுமே நம்பிக்கை கொண்டவர்கள் எனக் கருதப்படுவர். மேலும் ஒவ்வொரு சொல்லும், செயலும் இறை நேசத்தைப் பெறுவதற்காக மட்டுமே இருக்க வேண்டும்.

தொழுகை விரிப்பின் மீது நாம் நிற்கக் கூடாது. அந்த நேரத்தில் மட்டும் இறைவனின் உதவியை வேண்டி, நமது நிலை மாறியதும் அல்லாஹ்வை மறந்து விடக் கூடாது. 'ஹாஃபிளூன்' என்று அல்லாஹ் கட்டளை இட்டிருப்பதன் பொருள், மற்ற மார்க்கங்களைப் போல் இஸ்லாத்தின் இறை வணக்கம் என்பது ஒரு தரப்பைச் சார்ந்ததல்ல. இது ஒருவழிப்பாதை அல்ல.

ஒரு மனிதர் தனது தொழுகையைப் பாதுகாக்கும்போது, அல்லாஹ் அவரைப் பாதுகாக்கிறான். அல்லாஹ்வின் இந்தப் பாதுகாப்பு, நற்கூலிகள் வடிவில் இவ்வுலகிலும் மறுவுலகிலும் வெளிப்படுகிறது. ஒரு மனிதன் தனது குழந்தைகளைக் கண்களுக்குக் குளிர்ச்சியானவர்களாகக் காண்பதை விட அவருக்கு வேறு என்ன பெரிய மகிழ்ச்சி இருக்க முடியும்? பொதுவாக தொழுகைகளை நிலைநாட்டுவதைக் குறித்து ஆண்களிடம் அதிகமாகக் கூறப்படுவதால், சில பெண்கள் தமது தொழுகைகளில் ஏற்படும் பலவீனங்களை அதிகம் பொருட்படுத்தத் தேவையில்லை எனக் கருதுகின்றனர். உண்மையில் ஆண்கள் தமது தொழுகைகளை நிறைவேற்றுவதில் ஒரு படி அதிகம் கவனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழ வேண்டியதுள்ளது. இருப்பினும் தொழுகையின் கடமையைப் பொருத்தவரையில் ஆண்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு பெண்களுக்கும் முக்கியமான கடமையாகும். மேலும் பெண்கள் தமது குழந்தைகளுக்கும் தர்பிய்யத் வழங்க வேண்டிய–திருப்பதால், அவர்கள் தொழுகையின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். எப்போது ஒரு பெண் தனது தொழுகைகளைப் பாதுகாக்கிறாளோ அப்போதுதான் அவள் தனது குழந்தைகள் சுவர்க்கம் செல்வதற்கு உத்திரவாதம் தருபவளாக ஆக முடியும்.

*தொழுகைகள் ஒருவரை எல்லா விதமான தீய செயல்களிலிருந்தும், விரும்பத்தகாத செயல்களிலிருந்தும் பாதுகாக்கிறது. எனவே தொழுகைகளைத் தொடர்ச்சியாகவும், முறைப்படியும் நாம் தொழுது வரும்போது, தொழுகைகளே நம்மை வெட்கக் கேடான தீய செயல்களிலிந்து பாதுகாக்கிறது. இந்த ஆன்மீகக் கேடயமானது தனி நபரை மட்டுமல்ல; முழு குடும்பத்தையுமே பாதுகாக்கிறது. இறை வணக்கத்தை முழு கவனத்துடன் அதன் அனைத்து உரிமைகளையும் பேணியவாறு நிறைவேற்றுபவரின் நண்பனாகவும், உதவியாளனாகவும் அல்லாஹ் ஆகி விடுகிறான்.*

நான் தற்போது இன்னொரு முக்கிய விஷயத்தின் பக்கம் செல்கிறேன். இங்கு இந்த விஷயத்தைக் குறித்துப் பேசுவதற்கான குறிப்பிட்ட தேவை உள்ளது. ஏனெனில் இந்தச் சமுதாயத்தில் இந்தக் குறிப்பிட்ட இஸ்லாமிய கட்டளையை எதிர்த்து முஸ்லிம் அல்லாதவர்களால் குரல் எழுப்பப்படுகிறது. துரதிஷ்டவசமாக நமது பல அஹ்மதிப் பெண்களும், குமரிப் பெண்களும் முஸ்லிம் அல்லாதவர்களின் தாக்கத்திற்கு ஆளாகி, தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாக உள்ளனர். எனவே அவர்கள் இந்தக் கட்டளையைப் பேணுவதுமில்லை; அதற்குரிய முக்கியத்துவத்தை அதற்கு கொடுப்பதுமில்லை. ஓர் அஹ்மதிப் பெண் எந்தக் காரணத்திற்காகவும் இஸ்லாத்தின் எந்தவொரு கட்டளைக்கும் அதற்குரிய முக்கியத்துவத்தை வழங்கத் தவறினால், அவள் மார்க்கத்தை விட்டு விலகிச் செல்வது மட்டுமல்லாது, பைஅத் செய்தபோது கொடுத்த வாக்குறுதியையும் அவள் முறித்து விடுகிறாள்.

நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். எந்த மக்கள் சமுதாயத்திற்குப் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வருகிறார்களோ அவர்கள் அசல் மாற்றத்தை உருவாக்குவதற்கு முன்னர் ஆரம்பத்தில் எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும் சந்திக்க வேண்டி வரும். புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கும் மக்கள் மீது, எந்த மாற்றத்தையும் விரும்பாதவர்களிடமிருந்து கொடுமைகளும், துன்பங்களும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. எனவே, இந்த எதிர்ப்புகளை–யெல்லாம் துணிவுடனும், உறுதியுடனும் சந்தித்த பின்னரே இவர்கள் பிறரைச் சீர்திருத்தவும் சமுதாயத்தில் ஒரு சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியும். இவர்களால் இவர்களது முயற்சிகளின் பலனை அடைய முடியா விட்டாலும், அவர்களின் குழந்தைகள் அல்லது வருங்கால சந்ததிகள் தமது பெற்றோரின், அல்லது மூதாதையரின் அருமையான தியாகங்களின் நற்பலன்களைக் கண்டு கொள்கின்றனர்.

உலகியல் மக்கள் தங்கள் உலகாதாய குறிக்கோள்–களையும், நோக்கங்களையும் விட்டு விடுவதற்கு எதிர்ப்புக் காட்டவே செய்வர். மேலும் தமக்கு மட்டுமல்ல; தமது சமுதாயத்திற்கும் தீமை தரும் வழியைக் கடைபிடிப்பார்கள். எனினும் ஓர் அஹ்மதி, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதாக உறுதிமொழி எடுத்துள்ளார். எனவே ஓர் அஹ்மதி தனது செயல்களில் விரைப்புடன் பிடிவாதம் காட்ட மாட்டார். அவரது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வை மகிழ்விக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்காகவே இருக்கும். அவ்வாறுதான் இருக்கவும் வேண்டும். எங்கு அஹ்மதிகள் இந்த உணர்வு கொண்டவர்களாக இருக்கின்றார்களோ, அப்போது அவர்களால் தமது கொள்கைகளை நம்பிக்கையுடனும், தாழ்வு மனப்பான்மை இல்லாமலும் வெளிப்படுத்தவும், செயல்படுத்தவும் முடியும்.

எதனை அஹ்மதிகள் கொள்கை ரீதியாகவும், செயல் ரீதியாகவும் கடைபிடிக்கின்றார்களோ அது, உலகிற்கு தீமை

தராது என்பது மட்டுமல்ல. அதனால் சமுதாயத்தில் சாதகமான நற்பலனும் நல்ல மாற்றங்களும் ஏற்படும். அஹ்மதிகள் எதனைக் கூறி, அதன்படி செயல்படவும் செய்கின்றார்களோ அது இன்றைய சமுதாயத்தைச் சீர்திருத்துவதோடு எதிர்கால தலைமுறையினரையும் சீர்திருத்தும் என்று நிரூபிக்கப்படும். ஏனெனில் அஹ்மதிகள் எதனைப் பிரச்சாரம் செய்தாலும் அல்லது செயல்படுத்தினாலும் அது மனித குலத்திற்கு நன்மை –யையும், அல்லாஹ்வின் மகிழ்ச்சியையுமே பெற்றுத் தரும்.

நான் இப்போது எந்த இஸ்லாமியக் கட்டளையைக் குறித்துக் கூறினேனோ, மேலும் எந்தக் கட்டளை நம்பிக்கை கொண்ட பெண்ணின் கண்ணியத்திற்கும் மகிமைக்கும் அடையாளமாகத் திகழ்கின்றதோ அதன் பக்கம் நேரடியாக வருகிறேன். அது பர்தாவைப் பற்றிய கட்டளையாகும். இந்த இஸ்லாமியக் கட்டளை 1400 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த பெண்களுக்கு மட்டுமன்று. அல்லது ஆசியாவில் வாழ்கின்ற அல்லது மூன்றாம் உலக நாடுகளில் வாழ்கின்ற பெண்களுக்கு மட்டுமல்ல. மாறாக, இந்தக் கட்டளை எல்லா முஸ்லிம் பெண்களுக்கும், உலகின் எல்லா பகுதிகளுக்கும், எல்லா காலத்திற்கும் உரியதாகும்.

சூரா நூரில் அல்லாஹ் கூறுகின்றான்: மேலும் நீர் நம்பிக்கை கொண்ட பெண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் தானாகவே வெளிப்படுவதைத் தவிர தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமலிருக்குமாறும் தங்கள் முந்தானை ஆடையால் தங்கள் மார்புகளை மறைத்து அணிந்து கொள்ளுமாறும் அவர்கள் தங்கள் கணவர்கள், அல்லது தங்கள் தந்தையர்கள் அல்லது தங்கள் கணவர்களின் தந்தையர்கள், அல்லது தங்கள் ஆண்மக்கள் அல்லது தங்கள் கணவர்களின் ஆண்மக்கள் அல்லது தங்கள் சகோதரர்கள் அல்லது சகோதரர்களின் ஆண்மக்கள் அல்லது தங்கள் சகோதரிகளின் ஆண்மக்கள் அல்லது தங்கள் (இனத்தைச் சார்ந்த) பெண்கள் அல்லது தங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் அல்லது பருவம் அடையாத ஆண் ஊழியர்கள் அல்லது பெண்களின் மறைவான உறுப்புகளைப் பற்றித் தெரியாத சிறுவர்கள் ஆகியவர்களைத் தவிர வேறெவரிடமும் தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இருக்குமாறும் தங்கள் அலங்காரத்துள் மறைத்து வைத்திருப்பது வெளிப்பட வேண்டுமென்பதற்காகத் தங்கள் கால்களை (நிலத்தில் வேகமாக)த் தட்டி நடக்காமல் இருக்குமாறும் கூறுவீராக. நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் யாவரும் வெற்றி பெற வேண்டும் என்றால் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். (24:32)

எனவே நீங்கள் உங்களை அல்லாஹ்வின் கட்டளைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளையும் ஏற்று நடப்போம் என்று உறுதி எடுத்துக் கொண்ட நம்பிக்கையாளர்களைச் சேர்ந்தவர்கள் எனக் கருதினால், மேலும் இக்கால இமாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த நம்பிக்கையாளர்களைச்




சேர்ந்தவர்கள் என உங்களைக் கருதினால், பின்னர் இந்தக் கட்டளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தைய பெண்களுக்கு எவ்வளவு முக்கியமானதாக இருந்ததோ அந்த அளவு உங்களுக்கும் முக்கியமானதே. நான் கூறியபடி, இந்தக் கட்டளை உலகின் எந்தப் பகுதியில் வாழ்கின்ற நம்பிக்கை கொண்ட முஸ்லிம் பெண்களுக்கும் உரியதாகும்.

நான் ஒன்றை தெளிவுபடுத்துகிறேன். இந்தக் கட்டளையை அல்லாஹ் பெண்களுக்குக் கூறுவதற்கு முன்னர் ஆண்களுக்கு கட்டளையிடுகிறான். அவர்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்றும், அந்நியப் பெண்களை தீய பார்வையுடன் பார்க்கக் கூடாது என்றும் கட்டளை இடுகிறான். எனவே இஸ்லாம் அநீதியிழைக்கவுமில்லை; பாரபட்சம் காட்டவும் இல்லை. மேலும் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாம் பெண்களை வீட்டின் நான்கு சுவர்களுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டும் எனக் கூறவில்லை. அவ்வாறு கூறியிருப்பதற்கு சாத்தியமே இல்லை. ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்கத்தின் பாதியினை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளார்கள். உண்மையில் மக்கள் அன்னாரிடமிருந்து கற்றுக் கொண்டனர். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூட்டங்களையும், சபைகளையும் கூட்டி உரையாடுவார்கள் என்றும், அவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில ஆண் சஹாபாக்களும் கலந்து கொண்டு இஸ்லாத்தைக் குறித்து தெரிந்து கொள்வர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல; போர்க் காலங்களின் போது முஸ்லிம் பெண்கள் கண்ணியத்துடனும், கடமையுணர்ச்சியுடனும் தொண்டாற்றி வந்தனர். சில பெண்களுக்கு காயம் அடைந்தவர்களைக் கவனிக்கும் செவிலியர் பணி தரப்பட்டிருந்தது. இன்னும் சில பெண்கள் சில போர்களில் போர் புரிந்தும் உள்ளனர். ஹஸ்ரத் உம்மே அம்மாராவைக் குறித்துக் கூறப்படுகிறது. ஒரு போரின்போது அவர்கள் எவ்வளவு திறமையுடன் போர் புரிந்தார்கள் என்றால், போர்க்களத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டுமே அவர் 'உம்மே அம்மாரா' என அறிந்து

கொண்டார்கள். பிற ஆண் சஹாபாக்கள் அவரை ஓர் இளம் ஆண் வீரர் என நினைத்து வியப்புடன் பார்த்தனர். ஏனெனில் அன்னார் தம்மை தலை முதல் கால் வரை மறைத்திருந்தார்கள்.

மற்றொரு போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காப்பாற்றுவதற்காக உம்மே அம்மாரா மிகத் தீரத்துடன் போர் புரிந்தார்கள். அதனால் படுகாயமும் அடைந்தார்கள். அன்னாரின் மிகுந்த கடமையுணர்ச்சியின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பாராட்டுக்களைப் பெறும் நற்பேறு பெற்றார்கள். எனவே நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் கட்டளைகளை நிறைவேற்றி வருவதும் அவற்றைப் பாதுகாத்து வருவதும் உங்கள் கடமையாகும். வெறும் சொற்களினால் மட்டுமே உம்மே அம்மாராவின் தகுதியை நீங்கள் அடைந்து விடலாம் என நீங்கள் எண்ணுகிறீர்களா? அது சாத்தியம் என நீங்கள் நினைத்தால் நீங்கள் பெரும் தவற்றில் உள்ளீர்கள். இந்தத் தகுதியை நீங்கள் அடைய விரும்பினால் உங்களது சுய விருப்பங்களுக்கும், ஆசைகளுக்கும் எதிராக போர் புரிய வேண்டும். சமுதாயத்தின் சில பிரிவுகள் உங்களைக் குறித்து கொண்டுள்ள கருத்துகளுக்கு எதிராக நீங்கள் போராட வேண்டும். அவற்றைச் சந்திக்க துணிய வேண்டும். நீங்கள் தைரியத்துடன் உங்களது தூய்மையான தகுதிகளை ஏளனத்துக்கும், எள்ளி நகையாடுதலுக்கும் மத்தியில் நிலை நிறுத்த முயற்சிக்க வேண்டும். திருக்குர்ஆனின் சட்டங்களையும் போதனைகளையும் உங்களது அன்றாட வாழ்வில் கடைபிடிக்க எப்போதும் நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நீங்கள் ஓர் உண்மையான நம்பிக்கை கொண்ட பெண்ணாகக் கருதப்படுவீர்கள்.


இன்று ஜல்ஸா சூழலில் இருப்பதனால்தான் பர்தா அணிந்திருக்கிறீர்கள் என்ற கருத்தை நீங்கள் மாற்றிக் காட்ட வேண்டும். மாறாக, அல்லாஹ்வின் திருப்தியை நீங்கள் பெற விரும்புவதாலேயே பர்தாவைப் பேணுகின்றீர்கள் என்பதை நிரூபியுங்கள். லஜ்னா மற்றும் ஜமாஅத் நிகழ்ச்சிகளுக்காக மட்டுமே ஹிஜாப் அல்லது பொருத்தமான கண்ணியமிக்க ஆடைகளை அணிவதில்லை என்று நிரூபித்துக் காட்டுங்கள். எனவே இன்று நீங்கள் ஒரு புதிய உறுதிமொழி எடுக்க வேண்டும். இன்றிலிருந்து எந்த உலக நிகழ்ச்சியாக இருப்பினும் சரி, என்ன பரிகாசமும் கேலியையும் சந்தித்தாலும் சரி, மக்கள் உங்களிடம் எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டாலும் சரி, உங்களது ஹிஜாபை, மார்க்க ஆடையைக் கழட்ட மாட்டோம் என்று உறுதி எடுங்கள். உண்மையில் நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடக்கவும், அவனது மகிழ்ச்சிக்காக உலகாதாய வாழ்வின் எல்லா அம்சங்களையும் விட்டு விலகி, மாய கவர்ச்சியையும், வசீகரத் தோற்றத்தையும் உங்களது வாழ்விலிருந்து அகற்றவுமே இந்த உறுதிமொழியை எடுக்கின்றீர்கள். உங்களது ஹிஜாபும், மார்க்க ஆடையும் உங்களது தன்னடக்கத்தின், கண்ணியத்தின் ஒரு பகுதியாகும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். எனவேதான் அல்லாஹ் நம்பிக்கை கொண்ட பெண்களிடம் இதனை கடைபிடிக்குமாறு கூறுகிறான்.

சில சமயங்களில் எனக்கு புகார்கள் அறிக்கைகள் வருகின்றன. சில அஹ்மதி குமரிப் பெண்களும், பெண்களும் தமது தலையை மறைத்துக் கொண்டாலும், அவர்கள் வெளியில் Mall –க்கு செல்லும் போது இறுக்கமான ஜீன்ஸ்களையும் T-Shirt –களையும் அணிந்து செல்கின்றனர். அல்லது இடுப்பைத் தொடாத கட்டையான பிளவுஸ்களை அணிந்து செல்கின்றனர். நினைவில் கொள்ளுங்கள். இத்தகைய அடக்கமற்ற தன்மையை மேற்கொள்வது உங்களது மார்க்கத்தைக் கேலி செய்வதாகும். பல தடவைகளில் நான் அஹ்மதிப் பெண்களிடம் கூறியிருக்கிறேன். அல்லாஹ் பர்தாவினால் முகத்தை மறைக்க வேண்டும் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, முழு உடலுக்கும் பர்தாவின் கட்டளை உள்ளது. இங்கு நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்திலும் கூறப்பட்டுள்ளது. எனவே நீங்கள் வீட்டை விட்டு வெளியில் செல்லும்போது தளர்ந்த மேலாடையை அல்லது ஒரு நீள Long Shawl அணிய வேண்டியது அவசியமாகும். புர்கா கோர்ட்டினுள் நீங்கள் T-Shirt அல்லது Mini Skirt –ஐ அணியக் கூடாது. Long Shawl அல்லது Chadar உங்களது முழு உடலையும் மறைத்துக் கொள்ளும். இதனை நீங்கள் பின்பற்றத் தவறினால் நீங்கள் பர்தாவை மீறுகிறீர்கள் என்பது மட்டுமல்ல. அது வெட்கங்கெட்ட தன்மையின் வெளிப்பாடும் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெட்கம் மார்க்கத்தின் ஒரு பகுதி எனக் கூறியுள்ளார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றொரு முறை கூறினார்கள். ஒவ்வொரு மார்க்கத்திற்கும் ஒரு தனிப்பட்ட சிறப்பு உண்டு. இஸ்லாத்தின் சிறப்பம்சம் வெட்கம் ஆகும் என்று கூறியுள்ளார்கள். வெட்கத்தைக் கடைபிடிக்காதவர்கள் சபிக்கப்பட்டுள்ளார்கள்.

*நம்பிக்கை கொண்டவர்களின் ஓர் அடையாளமாவது, அவர்கள் ஆன்மீகக் குருடர்களும் செவிடர்களும் படிப்பது போன்று இறை கட்டளைகளைப் படிக்க மாட்டார்கள். எனவே ஒவ்வொரு நம்பிக்கையாளரின் கடமை என்னவெனில், அவர் இஸ்லாத்தின் அனைத்துப் போதனைகளின்படியும் கட்டளைகளின்படியும் செயலாற்ற முயற்சிக்க வேண்டும். ஏனெனில் இறை கட்டளைகளைப் புரிந்து கொள்ளும் சக்தியும், தகுதியும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு உள்ளது. ஆனால் நிராகரிப்பாளர்களோ குருடர்களாகவும் செவிடர்களாகவும் இருப்பர். இதுவே அவர்களின் அடையாளமாகும். அவர்களின் ஆன்மீகத் தகுதிகள் ஓரிடத்தில் நின்று விடுகின்றன.*

எனவே உங்களது மார்க்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், நீங்கள் உடை உடுத்துவதில் ஏதும் பலவீனம் இருந்தால் அதனை அகற்றி ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழவும் வேண்டும். மேலும் உங்களது கற்பை நீங்கள் காத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அதன் மூலம் உங்கள் மார்க்கம் பாதுகாக்கப்படுகிறது. உங்களிடம் எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச பர்தா உங்களது முடியையும், நாடியையும் மறைத்துக் கொள்வதாகும். எனினும் இந்தப் பர்தாவை நீங்கள் மேற்கொள்வதாயின் நீங்கள் Make-up செய்திருக்கக் கூடாது.

இஸ்லாம் பெண்களை வேலை செய்யக்கூடாது எனக் கூறவில்லை. எனினும் எந்த வேலையில் கண்ணியக் குறைவான, பொருத்தமற்ற உடை அல்லது Uniform அணிய வேண்டியதுள்ளதோ அதற்கு அனுமதி இல்லை. உண்மையில் உலகில் பல இடங்களில் அஹ்மதிப் பெண்கள் மருத்துவர் களாகவும், ஆசிரியர்களாகவும், பொறியாளர்களாகவும், விஞ்ஞானி –களாகவும் மேலும் பல துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் தன்னடக்கத்தின் தரத்தை நிலை நாட்டியவாறும், ஹிஜாபைக் கடைபிடித்தவாறும் தமது பணியினைச் செய்து வருகின்றனர்.



ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பெண்கள் கடைபிடிக்க வேண்டிய பர்தாவைக் குறித்து நான் குறிப்பிட்ட வசனத்தின் ஒளியில் கூறினார்கள்: நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் கூறுவீராக. அவர்கள் தமது பார்வைகளை தாழ்த்திக் கொள்ள வேண்டும். அந்நியப் பெண்களை இச்சையின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் பார்க்கக் கூடாது. அவர்களின் பார்வைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பழக்கத்தை உருவாக்க வேண்டும். அவர்கள் தமது மறைவான உறுப்புகளை எவ்வகையிலேனும் காத்துக் கொள்ள வேண்டும். அதைப் போன்று அவர்கள் தமது காதுகளை மணம் செய்ய விலக்கப்பட்டவர்களைத் தவிர பிறரிடமிருந்து காத்துக் கொள்ள வேண்டும். அதாவது அவர்களின் பாடல்களையோ, கவர்ச்சியான குரல்களையோ கேட்பதை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் அவர்களின் அழகைப் பற்றிய வர்ணனைகளைக் கேட்கக் கூடாது. இது கண்களையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

பிறகு பெண்களைப் பற்றி வருகிறது. அன்னார் கூறுகிறார்கள்: இதைப் போன்று நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறுவீராக. அவர்கள் மணம் செய்ய விலக்கப்பட்டவர்களைத் தவிர பிற ஆண்களைப் பார்ப்பதை விட்டும் தமது கண்களைக் காத்துக் கொள்ள வேண்டும். அவர்களின் குரல்களைக் கேட்பதை விட்டும் தமது காதுகளைக் காத்துக் கொள்ள வேண்டும். அதாவது இச்சையின் உணர்வுகளை அவர்களுக்குள் தூண்டும் குரல்களைக் கேட்பதை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் தமது மறைவான உறுப்புகளைக் காத்துக் கொள்ள வேண்டும். மணம் செய்ய விலக்கப்பட்டவர்களைத் தவிர பிற ஆண்களிடம் தமது அழகை வெளிப்படுத்திக் காட்டக் கூடாது. தங்கள் முந்தானை ஆடையினால் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் தங்கள் தலைகளையும், காதுகளையும் மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் நடனக்காரிகளைப் போன்று தமது கால்களைத் தட்டி நடக்கக் கூடாது. நல்லொழுக்க தடுமாற்றங்களிலிருந்து ஒருவர் தன்னைக் காத்துக் கொள்ள இவையெல்லாம் வழிமுறைகளாகும்.

அன்னார் கூறுகிறார்கள்: தூய்மையடைவதற்கான இரண்டாவது வழிமுறை என்னவென்றால், இறைவன் பக்கம் திரும்புவதாகும். தடுமாறி விடுவதை விட்டும் அவனிடம் துஆ செய்ய வேண்டும். அவர்கள் கூறுகிறார்கள்: மற்றொரு வழிமுறை: 'விபச்சாரத்தின் பக்கம் நெருங்காதீர்கள்' என்பதாகும். இதன் பொருள், ஒருவர் தனது உள்ளத்தை இந்தத் தீமையின் திசையில் திருப்பும் எல்லா சந்தர்ப்பங்களை விட்டும் தவிர்ந்து கொள்வதாகும். இந்தத் தீய செயலில் ஈடுபடுகிறவர் தீமையின் எல்லைக்கே சென்று விடுகிறார். விபச்சாரத்தின் வழி ஒரு தீய வழியாகும். ஏனெனில் இது ஒருவரின் இறுதி குறிக்கோளை அவர் அடைய விடாமல் அவரது முன்னேற்றத்தைத் தடுக்கிறது. மேலும் இது வாழ்வின் நோக்கத்தை அடைவதற்கு எதிராக தீமை பயக்கிறது. எவர்கள் திருமணத்திற்கான எந்த வழியினையும் பெறாமல் இருக்கிறார்களோ அவர்கள் தமது கற்பைக் காத்துக் கொள்ள பிற வழிகளைக் கையாள வேண்டும்.

எனவே, இந்த உலக வாழ்க்கை தடுமாறச் செய்யும் தடைக் கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அடியின் போதும் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வது நம்பிக்கை கொண்ட ஒவ்வோர் ஆண், பெண்ணின் கடமையாகும். இந்த இஸ்லாமிய போதனைகள் எப்போதும் பின்பற்றப்பட்டால், பல கணவன் – மனைவியருக்கு இடையில் தோன்றுகின்ற நம்பிக்கையற்ற தன்மை தோன்றாது. அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவருக்குரிய உரிமைகளை நிறைவேற்றாமல், தான் மட்டும் மகிழ்ச்சியாக பாதுகாப்பாக இருக்கின்றனர். இதன் விளைவாக அவர்களின் வீடுகள் அழிந்து விடுகின்றன.

*(தொடர்ச்சி 23 ஆம் பக்கம்...)*

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகளுடனும் முறையற்று நடந்து கொண்டவர்களுடனும் நடந்து கொண்ட விதம் 2

- - - மவ்லானா ஹமீது கவ்ஸர், காதியான் - - -

தமிழாக்கம்: மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்



அப்துல்லாஹ் பின் அபி ஸலூலின் மகனான ‘ஹுபாப்’ -ன் பெயரை ‘அப்துல்லாஹ்’ என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மாற்றினார்கள். அவர் ஒரு தூய நபித்தோழராக இருந்தார். விஷயம் அவர் வரை சென்றடைந்த போது, அவர் நிம்மதியிழந்தவராக நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எனது தந்தையின் துரோகத்தின் காரணமாக அவருக்கு மரண தண்டனை கொடுக்க விரும்புகிறீர்கள் என நான் கேள்விப்பட்டேன். ஒருவேளை தங்களது தீர்ப்பு இதுதான் எனில் தாங்கள் எனக்கு கட்டளையிடுங்கள். நான் இப்போதே எனது தந்தையின் தலையைத் துண்டித்து தங்களது காலடிகளில் போடுகின்றேன். ஆனால் தாங்கள் வேறு யாருக்கும் அவ்வாறு கட்டளையிட்டு விடாதீர்கள். ஏனெனில் என் உடலிலுள்ள ஏதாவதொரு மடமையின் நரம்பு என் உடலில் உணர்ச்சியைத் தூண்டி எனது தந்தையைக் கொன்றவருக்கு எப்போதாவது ஏதேனும் இழப்பை ஏற்படுத்தி விட்டால், நான் இறை திருப்தியை விரும்பியிருந்தும் நரகத்தில் வீழ்ந்திடுவேன் என்று கூறினார்.

அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நயவஞ்சகர்களின் தலைவன் மற்றும் ரஸூலின் துரோகியின் மகனுக்கு கூறிய பதிலானது பொன் நீரில் எழுதுவதற்கு உகந்தது. அன்னார் அவரை சாந்தப்படுத்தினார்கள். மேலும் கூறினார்கள்: எமது நோக்கம் ஒருபோதும் அவரை கொல்வது அல்ல. மாறாக நாம் உமது தந்தையுடன் மென்மையாகவும், நல்ல முறையிலும் நடந்து கொள்வோம். ஆயினும் அல்லாஹ் அப்துல்லாஹ் பின் அபி ஸலூலின் துரோகத்திற்கான தண்டனையை அவனது மகனின் மூலமாகவே கிடைக்கச் செய்தான். அது என்னவெனில், இஸ்லாமிய படை மதீனாவிற்கு திரும்பியபோது அப்துல்லாஹ் தனது தந்தையை வழிமறித்து நின்று, “இறைவன் மீது ஆணையாக! நீர் உமது வாயினால் ரஸூல் (ஸல்) அவர்கள் தான் கண்ணியத்திற்குரியவர். நீர் இழிவானவர் என்பதை ஒப்புக் கொள்ளாத வரை மதீனாவில் நுழைய விட மாட்டேன்” என்று கூறினார். இறுதியில் அப்துல்லாஹ் பின் அபி ஸலூல் கட்டாயத்திற்குள்ளாகி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தான் கண்ணியமிக்கவரும், மேன்மைக்குரியவரும் ஆவார். மேலும் நான் இழிவடைந்தவனாவேன் என்று ஒப்புக் கொண்டான். இச்சம்பவத்திலிருந்து அல்லாஹ் ரஸூலின் துரோகிக்கான தண்டனையை அவனது மகனின் வாயிலாகவே கொடுக்க வைத்து விட்டான் என்பது தெளிவாகிறது.

அப்துல்லாஹ் பின் அபி ஸலூல் மரணப் படுக்கையில் கிடந்த போது ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அவனை நலம் விசாரிக்கச் சென்றார்கள். அப்துல்லாஹ் பின் அபி ஸலூல், ரஸூல் (ஸல்) அவர்களிடம், “எனக்கு தாங்கள் அணிந்துள்ள தங்களது உடையினைக் கொடுங்கள். அதிலேயே என்னை நல்லடக்கம் செய்யுங்கள். என்னுடைய ஜனாஸா தொழுகையை தொழுங்கள். மேலும் எனக்கு மன்னிப்பு வேண்டி துஆவும் செய்யுங்கள் என்று வேண்டினான். துல்க.்.தா, ஹிஜ்ரி 9 -ஆம் ஆண்டு அதாவது கி.பி. 631 -ஆம் ஆண்டு அப்துல்லாஹ் பின் அபி ஸலூல் வ.்.பாத் ஆனான். ரஸூல் (ஸல்) அவர்கள் அவனுடைய ஜனாஸா தொழுகையினை தொழ வைக்க வந்த போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரை தடுத்து அவனுடைய அனைத்து துரோகத்தையும் நினைவூட்டியவாறு, தாங்கள் நயவஞ்சகர்களின் தலைவனது ஜனாஸா தொழுகையினை தொழ வைக்கப் போகிறீர்களா? இப்படிப்பட்ட மக்களுக்கு பாவமன்னிப்பிற்காக துஆ செய்வதிலிருந்தும் அல்லாஹ் தடுக்கவில்லையா? எனக் கேட்டார். ரஸூல் (ஸல்) அவர்கள் புன்னகைத்தவாறு அல்லாஹ் எனக்கு اِسْتَغْفِرْ لَهُمْ اَوْ لَا تَسْتَغْفِرْ لَهُمْ என்று அனுமதி வழங்கி இருக்கிறான். அதாவது நீர் அவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டினாலும் வேண்டாமல் இருந்தாலும் ஒன்றே ஆகும். (9:80) ஒருவேளை நீர் அவர்களுக்காக எழுபது முறை கூட இஸ்திக்.்.பார் செய்தாலும் அவர்களை ஒருபோதும் மன்னிக்க மாடடேன்.

ரஸூல் (ஸல்) அவர்கள், "ஒருவேளை அவர்களுக்காக எழுபது முறைக்கும் அதிகமாக பாவமன்னிப்பு வேண்டினால் அவர்களுக்கு பாவமன்னிப்பு கிடைத்து விடும் என்று தெரிந்திருந்தால் நான் அதனையும் செய்வேன்" என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ரஹ்மத்துல் லில் ஆலமீன் உடைய கருணையின் உணர்வை கட்டுப்படுத்த முடியாமல் பின்வாங்கினார்கள். ஜனாஸா தொழுகைக்குப் பிறகு அவனது உடல் கபரில் இறக்கப்பட்ட போது அன்னார் அதனை மறுபடியும் வெளியே எடுக்குமாறு கட்டளை இட்டார்கள். வெளியே எடுக்கப்பட்ட பிறகு அன்னார் அவனது தலையினை தனது மடியில் வைத்து தனது உமிழ்நீரை அவனது வாயில் இட்டார்கள். பின்பு அவனை கபரில் இறக்கக் கட்டளையிட்டார்கள். இறுதிச் சடங்குக்குப் பிறகு அன்னார் திரும்பியதும், وَلَا تُصَلِّ عَلٰٓى اَحَدٍ مِّنْهُمْ مَّاتَ اَبَدًا وَّلَا تَقُمْ عَلٰى قَبْرِهٖ அவர்களுள் எவர் மரணமடைந்து விட்டாலும் அவருக்காக நீர் ஒருபோதும் (ஜனாஸா தொழுகை) தொழ வேண்டாம். அவரது கல்லறையில் (பிரார்த்தனைக்காக) நிற்கவும் வேண்டாம். (9:84) என்று அல்லாஹ் கட்டளையிட்டான்.

கண்ணியமிக்கோரே! ஒருவேளை அல்லாஹ் நாடியிருந்தால் அப்துல்லாஹ் பின் அபி ஸலூலின் ஜனாஸா தொழ வைப்பதற்கு முன்பே ரஸூல் (ஸல்) அவர்கள் மீது மேற்கூறப்பட்ட வசனத்தை இறக்கியிருந்திருக்கலாம். மேலும் ஜனாஸா தொழுகை தொழுவதிலிருந்தும் தடுத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. இதில் நுட்பமான கருத்து யாதெனில் அல்லாஹ் நம்மவர்களுக்கும் மற்றவர்களுக்கும் புரிய வைக்க விரும்புவதாவது, உலக மக்களே! பாருங்கள்! எவரை நான் ரஹ்மத்துல் லில் ஆலமீன் ஆக ஆக்கியுள்ளேனோ, மிகச் சிறந்த நல்லொழுக்கங்களை புகட்டியுள்ளேனோ அவரது கருணை மற்றும் சிறந்த நல்லொழுக்கத்தின் முன்மாதிரியைப் பாருங்கள். கொடிய துரோகியும் கூட அவரது கருணையிலிருந்து விலக்கப் -பட்டிருக்கவில்லை. ஒருவேளை அப்துல்லாஹ் பின் அபி ஸலூலின் ஜனாஸா தொழுகை தொழ வைப்பதற்கு முன்னர் இந்த கட்டளை இறக்கியிருந்தால், முஹம்மது (ஸல்) அவர்களின் கருணை மற்றும் உயர் நல்லொழுக்கத்தின் அற்புதம் உலகின் முன் வந்திருக்காது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனது நோக்கம் நபிமார்களது ஒவ்வொரு நல்லொழுக்கமும் வெளிப்பட வேண்டும். ஒளிமிக்க வாழ்வினை இரு பகுதிகளாகப் பிரிக்கின்றான். ஒரு பகுதி கஷ்டம் மற்றும் துன்பங்களில் கழிகிறது. அவர்கள் எல்லா விதத்திலும் துன்புறுத்தப்படுகின்றனர். சோதனைக்கு ஆளாக்கப்படுகின்றனர். இதனால் அவர்களிடம் கடும் துயரத்தினால் அன்றி ஒருபோதும் வெளிப்பட முடியாத நிரூபணமாகாத சிறந்த நல்லொழுக்கங்கள் வெளிப்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றான். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 277, 278)

செவியேற்போரே! ஏறக்குறைய நபி (ஸல்) அவர்கள் மீது திருக்குர்ஆன் ரமலான் 24 -ல் அதாவது ஆகஸ்டு 20, கி.பி. 610 -



ஆம் ஆண்டு இறங்கியது. மேலும் நபி (ஸல்) அவர்கள் மக்காவாசிகளின் அநீதிகளால் நிம்மதியற்று ஸ∴பர் மாதம் 28 -ஆம் தேதி, ஹிஜ்ரி 1 -ஆம் ஆண்டில் அதாவது கி.பி. 622 -ல் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். ஏறக்குறைய 12, 13 ஆண்டுகள் நபி (ஸல்) அவர்கள் மக்கத்து கா∴பிர்களின் அவமரியாதை மற்றும் கொடுமைகளை மிகவும் பொறுமையுடன் தாங்கி வந்தார்கள். அவர்களுடைய மிகக் கேவலமான ஒழுக்கமற்ற வார்த்தைகளை கேட்டு வந்தார்கள். ஒருவன், இன்னக லமஜ்னூன் (15:7) முஹம்மதே! (ஸல்) நிச்சயமாக நீர் ஒரு பைத்தியம் ஆவீர் என்று கூறினான். ஒருவன், வ காலல் கா∴பிரூன ஹாதா ஸாஹிருன் கத்தாப் (38:5) முஹம்மதே! (ஸல்) நீர் ஒரு மந்திரவாதியும், பொய்யரும் ஆவீர் என்று கூறினான். மற்றொருவன், முஹம்மதே! (ஸல்) நீர் மிகக் கேவலமானவர் என்று கூறினான். நபி (ஸல்) அவர்கள் மிகவும் துன்பம் தரும் வார்த்தைகளைக் கேட்டு அமைதியுடனும், பொறுமையுடனும் இருப்பார்கள். மக்கத்து கா∴பிர்களின் முறைகேடான செயல்கள் பற்றிய பல சம்பவங்கள் உள்ளன. அவற்றுள் இரண்டினை கூறுவது அவசியமானதாகும். அவை இஸ்லாமிய வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. ஒருநாள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவில் கஅபா ஆலயத்திற்கு அருகில் ஸ∴பா மலை மீது அமர்ந்திருந்தார்கள். அச்சமயம் அவ்விடம் அபூஜஹ்ல் கடந்து சென்றான். அவன் ஹுஸூர் (ஸல்) அவர்களை எவ்வித காரணமுமின்றி வசைமாரி பொழிய ஆரம்பித்தான். அவன் தீய சொற்களைப் பேசிக் கொண்டிருந்தான். ஹுஸூர் அவர்கள் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். எவ்வித எதிர்ப்பையும் வெளிப்படுத்தவில்லை.

ஹஸ்ரத் ஹம்ஸாவின் ஓர் அடிமைப் பெண் இவ்வனைத்து காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருந்தாள். ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் சகிப்புத் தன்மையையும். அமைதியினையும் கண்டு மிகவும் தாக்கத்திற்கு ஆளானாள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் காட்டில் வேட்டையாடி விட்டு திரும்பிய போது அந்த அடிமைப் பெண் ஹஸ்ரத் ஹம்ஸாவிடம் தங்களது அண்ணன் மகனை அபூஜஹ்ல் மிகவும் தகாத சொற்களால் திட்டினான். ஆயினும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மிக அமைதியாக இருந்தார்கள் எனக் கூறினாள். ஹஸ்ரத் ஹம்ஸா முஸ்லிமாக இல்லாதிருந்தாலும், உள்ளத்தால் நேர்மையானவராக இருந்தார். இச்சம்பவத்தை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கேட்ட அதே நேரம் நேராக கஅபா ஆலயத்தை நோக்கிச் சென்றார்கள். அங்கு அபூஜஹ்ல் அமர்ந்திருந்தான். அன்னார் அவனது தலையில் வில்லால் அடித்து அபூஜஹ்லை நோக்கிக் கூறினார்கள். நான் இப்பொழுது முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தை ஏற்றுக் கொள்கிறேன். நீ அதிகாலையில் காரணமின்றி அவர்களை ஏன் தகாத வார்த்தைகளால் பேசினாய்? அவர் பதிலுக்கு ஏதும் பேசமாட்டார் என்பதாலா? நீ தைரியசாலி என்றால் என் அடிக்கு பதிலடி கொடு என்றார்கள். ஒருவேளை சண்டை ஆரம்பித்து விட்டால் அதன் விளைவு பயங்கரமாக இருக்கும் என்று எண்ணி அபூஜஹ்ல் சூழ்நிலைக்கேற்ப செயல்பட்டவனாக அவரிடம், போகட்டும் விடுங்கள் என் புறமிருந்தே தவறிழைக்கப்பட்டது. நான் உங்களின் அண்ணன் மகனை தீய வார்த்தைகளால் மிகவும் பழித்து விட்டேன் என்று கூறினான். (சீரத் இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 311)

(தொடரும்...)

---

*(13 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*


மிர்ஸா ஃபைய்ஸ் முஹம்மது அவர்களின் மரணத்திற்குப் பின் அவரது மகனான மிர்ஸா குல் முஹம்மது பஞ்சாபில் உள்ள சில கிளர்ச்சிக்காரர்களை அடக்கத் துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டார். முஹம்மது ஷா, ஷர் ஆலம், இரண்டாம் ஆலம் கீர் ஆகிய மன்னர்களின் காலத்தில் இது நடைபெற்றது. வரவிருந்த ஆபத்துகளைப் பற்றி அவர் தொடர்ந்து டில்லிலுள்ள மன்னர்களை எச்சரித்து வந்தார் என்று அரசாங்கக் கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது. வாய்மொழி வாக்குறுதிகளை தவிர டில்லியிலிருந்து அவருக்கு எந்த உதவியும் அளிக்கப்படவில்லை. மத்திய அரசின் உதவி இல்லாதபோதிலும் கூட பேரரசின் அதிகாரத்தை நிலைநிறுத்து –வதற்காக அவர் தொடர்ந்து போராடினார். முகலாயர்களின் ஆட்சி முடிவுற்று பஞ்சாப் சிறு சிறு தலைவர்களின் வசமான போது காதியானும் அதைச் சுற்றி 60 சதுர மைல் பரப்பளவுள்ள பகுதியும் இந்தக் குடும்பத்தின் அதிகாரத்தின் கீழ் வந்தது.

மிர்ஸா குல் முஹம்மது திறமைமிக்கவர். அவர் காதியானின் தன்னாட்சி பெற்ற தலைவரானார். காலாட் படையும், குதிரைப் படையும் அடங்கிய அவரது படையில் 1000 வீரர்கள் இருந்தனர். அவரிடம் மூன்று துப்பாக்கிகள் இருந்தன. 85 கிராமங்கள் அவரது ஆட்சிக்குட்பட்டு இருந்தன. அவர் மிகவும் நேர்மையானவராகவும், தாராள மனம் கொண்டவராகவும் விளங்கினார். நூற்றுக்கணக்கான மக்கள் அவரது வீட்டில் உணவருந்தினர். சுமார் 500 பேருக்கு உதவித் தொகை வழங்கினார். அவர் ஒரு தூய மனிதராக வாழ்ந்து வந்தார். நல்லவர்களின் அவையை நாடியவராக இருந்து வந்தார். அவருடைய நேர்மையையும் கல்விக்கு அவர் அளித்து வந்த ஆதரவையும் கண்டு நற்பண்பு மிக்க 400 அறிஞர்கள் அவரை சுற்றி இருந்து வந்தனர். அவரது தூய்மை, பக்தி, துணிச்சல், உறுதி, கருணை, தயாள குணம் ஆகியவை இன்றளவும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களால் போற்றப்படுகின்றன. அவர் புத்திக் கூர்மை மிக்கவராவும் முடிவெடுக்கும் ஆற்றல் பெற்றவராகவும் உறுதி மிக்கவராகவும் விளங்கினார். ஆயிரம் பேருக்கு எதிராகத் தனியொரு ஆளாக நின்று சண்டையிட்டு அவர்களைத் தோற்கடித்தார் என்று கூறப்படுகின்றது. பகலில் அவர் ஒரு துணிச்சலான வீரராகவும், இரவில் பக்தியுள்ள இறை அடியாராகவும் விளங்கினார். அக்காலத்தில் காதியானில் நிலவிய மார்க்க ரீதியான சூழ்நிலை காரணமாக அது மக்கா என்று அழைக்கப்பட்டது. பின்வருமாறு ஒரு செய்தி நிலவுகிறது.

ஒருமுறை முகலாயப் பேரரசில் அமைச்சராக இருந்த கியாதுத் தவ்லா காதியானுக்கு வருகை தந்தார். அவர் மிர்ஸா குல் முஹம்மதுக்கு அளிக்கப்படும் கண்ணியத்தையும் அவர் நடத்தி வந்த சிறு நீதிமன்றத்தையும் கண்டு பிரமித்துப் போனார். முகலாய வழித்தோன்றலில் இப்படிப்பட்ட ஒரு சிறந்த கண்ணியமான மனிதர் இந்தக் காட்டில் வாழ்ந்து வருவது தமக்கு முன்னரே தெரிந்திருந்தால், அவரை டில்லி அரியாசனத்தில் அமர்த்தி முஸ்லிம் பேரரசைக் காப்பாற்ற முயற்சி செய்திருப்பேன் என்று கண்களில் நீர் மல்கக் கூறினாராம். அக்காலத்தில் இது ஒன்றும் முடியாத காரியமில்லை. ஆரம்பத்தில் ராஜா ரஞ்சித் சிங்கிற்கு 9 கிராமங்களே சொந்தமாக இருந்தன. ஆனால் மிகக் குறுகிய காலத்தில் அவர் முழு பஞ்சாபுக்கும் ஆட்சியாளரானார். எவ்வாறாயினும் முஸ்லிம்கள் மிக மோசமான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருந்தார்கள்; அவர்களுடைய பேரரசை காப்பாற்ற முடியவில்லை.

மிர்ஸா குல் முஹம்மதுவின் இறுதிக்கால நோயின் போது ஒரு மருத்துவர் மருந்துக்காக பிராந்தியை அருந்தும்படி கூறினார். ஆனால் அவர் அதனை தீர்க்கமாக மறுத்து விட்டார். மது அருந்தக் கூடாது என்ற திருக்குர்ஆனின் கட்டளையை மீறி உயிர் வாழ்வதை விட இறப்பதே மேல் என்று கருதினார். கி.பி. 1800 –ஆம் ஆண்டு அவர் மரணமடைந்தார்.

**(தொடரும்...)**



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

1

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

***ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் முன்னோர்கள்***

வாக்களிக்கப்பட்ட மஹ்தியும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிறுவனருமான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

அவர்கள் அமீர் தைமூரின் முன்னோரான ஹாஜி பர்லாஸின் வழித்தோன்றல் ஆவார்கள். கிஷ் பகுதியை 200 ஆண்டுகள் ஆட்சி செய்த புகழ்பெற்ற இனமான பர்லாஸ் இனத்தைச் சேர்ந்தவர் தைமூர் என்பது நிரூபிக்கப்பட்ட ஒன்றாகும். பண்டைக் காலத்தில் உலகின் இந்தப் பகுதி ஸோக்டியானா என்று அறியப்பட்டது. சமர்கண்ட் அதன் தலைநகரமாக விளங்கியது. ஸோக்டியர்கள் ஈரானிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா குறிப்பிடுகிறது. சமர்கண்ட் என்ற சொல்லே ஈரானியச் சொல்லாகும். பர்லாஸ் என்ற சொல்லும் ஈரானியச் சொல்லாகும். 'உயர்ந்த குலத்தைச் சேர்ந்த தைரியமிக்க மனிதன்' என்பது அதன் பொருளாகும். இந்தியாவில் இமாம் மஹ்தி (அலை) அவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் முகலாயர்கள் என்று அழைக்கப்பட்டாலும், உண்மையில் அவர்கள் ஈரானிய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த மிர்ஸா ஹாதி பேக் என்பவர் முதல் முகலாய மன்னரான பாபருடனோ அல்லது நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாகச் சற்று தாமதித்தோ சமர்கண்டிலிருந்து இந்தியாவுக்கு வந்தார். அவர் தன்னோடு தமது சீடர்களும், பணியாளர்களும் அடங்கிய 200 பேர் கொண்ட ஒரு குழுவையும் அழைத்து வந்தார். பாபரால் மிகுந்த மரியாதையோடு நடத்தப்பட்டார். அவர் தாம் தங்குவதற்காக லாஹூரிலிருந்து 70 மைல் தொலைவில் இருந்த ஓரிடத்தை தேர்ந்தெடுத்தார். அவ்விடத்தில் ஒருகிராமத்தை உருவாக்கினார். அக்கிராமத்திற்கு வடகிழக்கே ஒன்பது மைல் தூரத்தில் பியாஸ் நதி பாய்ந்தது. இந்த கிராமத்திற்கு இஸ்லாம்பூர் என்று பெயரிடப்பட்டது.

அவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்த காரணத்தினால் பேரரசர் பல நூறு கிராமங்கள் அடங்கிய ஒரு ஜாகிரை அவருக்கு வழங்கி அதைச் சுற்றியிருந்த மாவட்டத்தின் காஸியாக நியமித்தார். எனவே அந்த கிராமத்தின் பெயர் காஸியின் தலைமையிடம் என்று பொருள்படும் இஸ்லாம்பூர் காஸி என்றானது. காலப்போக்கில் இஸ்லாம்பூர் என்ற சொல் கைவிடப்பட்டு 'காஸி' என்று அழைக்கப்பட்டது. 'ஸ' என்ற எழுத்து பொதுவாக 'த' என்று உச்சரிக்கப்படுவது வழக்கம். காலப்போக்கில் 'காஸி' என்பது 'காதி' என்று மாறி, பிறகு 'காதியான்' என்றானது.

இந்த கிராமமே தொடர்ந்து அக்குடும்பத்தின் வசிப்பிடமானது. பேரரசின் தலைநகரமான டில்லியிலிருந்து வெகு தொலைவில் இருந்த போதிலும் அக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் முகலாயப் பேரரசில் முக்கிய பதவிகளை வகித்து வந்தார்கள். முகலாயப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலத்தில் பஞ்சாபில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்குவதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பூட்டனாரான மிர்ஸா ஃபய்ஸ் முஹம்மது நடவடிக்கை எடுத்தார். அதன் காரணமாக கி.பி. 1716 –ஆம் ஆண்டு பேரரசர் ஃபர்ருக்ஸியார், அவருக்கு 'ஹஃப்த் ஹஸாரீ' என்னும் பதவியை வழங்கியதன் மூலம் 7000 வீரர்கள் அடங்கிய ஒரு படையை வைத்துக்கொள்ளும் அதிகாரத்தை வழங்கினார். ஃபர்ருக்ஸியாரின் ஆட்சி காலம் வரை இந்த பதவி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. மேலும் மன்னர், அவருக்கு 'அரசாங்கத்தின் உறுதிமிக்க கரம்' என்று பொருள்படும் 'அஸதுத் தவ்லா' என்னும் பட்டத்தை வழங்கினார்.

*(தொடர்ச்சி 12 -ஆம் பக்கம்...)*

# இறை மன்னிப்பின் காட்சிகள்

2

## - - - ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) - - -

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

பின்னர் நாங்கள் முன்னே சென்றோம். ஒரு கூட்டத்தின் அருகில் சென்று நின்றோம். அந்த கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் மிக உயர்தர ஆடையை அணிந்திருந்தனர். மேலும் அவர்கள் அனைவரும் மும்முரமாக இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருந்தனர். குஃப்ரான் என்னிடம், இது நபிமார்களின் கூட்டமாகும். இவர்கள் அனைவரும் தமது புவி வாழ்விலிருந்து தூயவர்களாகவும் மன்னிக்கப் -பட்டவர்களாகவும் இங்கு வந்துள்ளனர் என்று கூறினார்.

1) நான் சற்று தூரம் சென்றேன். ஒரு மனிதரின் பாவங்களின் எடை மிகவும் அதிகமாகி இருப்பதையும் நற்செயல்களின் எடை மிகக் குறைவாக இருப்பதையும் கண்டேன். நரகத்தின் மலக்குகள் அவரை தம்முடன் இழுத்துச் செல்ல முனைந்து கொண்டிருந்தனர். அப்போது அல்லாஹ்வின் அரியாசனையிலிருந்து ஒரு சப்தம் வந்தது. "இன்ன நபரை அவரது பதிவேட்டுடன் கொண்டு வாருங்கள்" என்று கூறப்பட்டது. அப்போது ஒரு நபர் கொண்டு வரப்பட்டார். அல்லாஹ் கூறினான்: "அந்த பாவம் நிறைந்த மனிதனின் மகன்தான் இவர். இவரது செயல்களின் பதிவேட்டையும் பாருங்கள்". அவரது பதிவேடு பார்க்கப்படும்போது அதில் அவர் தனது பெற்றோரின் பாவங்களுக்காக தொடர்ந்து துஆ செய்து பாவமன்னிப்பு வேண்டி வந்தது தெரிய வந்தது. அவரது துஆக்களை தந்தையின் நற்செயல்களுடன் சேர்த்து எடை போட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. அவ்வாறு செய்த போது அவரது நற்செயல்களின் எடை அதிகமாயிற்று. உடனே சுவர்க்கத்தின் மலக்குகள் அவரை தூக்கிக் கொண்டு சென்று விட்டனர்.

2) நாங்கள் மேலும் முன்னேறிச் சென்ற போது பாவம் செய்த மற்றொரு நபர் தனது நிலையை எண்ணி அழுது கொண்டிருந்தார். அப்போது அவரது கபரில் எத்தனை நம்பிக்கை கொண்டவர்கள் அவரது மன்னிப்பிற்காக துஆ செய்துள்ளனர் என கேட்கப்பட்டது. அந்த துஆக்களுடன் அவ்வழியே வழிப்போக்கர்களாய் சென்றவர்கள் செய்த துஆக்களையும் சேர்த்தபோது அவர் துள்ளிக் குதித்து மன்னிப்பின் மலக்குகளின் மடியில் சென்று அமர்ந்து சுவர்க்கத்திற்குச் சென்று விட்டார்.




3) மேலும் நாங்கள் சென்ற போது பாவம் செய்த மற்றொருவர் தனது நற்செயல்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதை எண்ணி சோகத்துடன் நின்று கொண்டிருந்தார். அப்போது இவ்வாறு கட்டளை இடப்பட்டது. எவராவது அவர் மீது துன்பம் இழைத்துள்ளனரா? அல்லது எவராவது அவர் மீது புறம் கூறி உள்ளனரா? என்று பார்க்கப்பட்டது. அவ்வாறாயின் அத்தகையவர்களின் நற்செயல்களை இவரது கணக்கில் சேர்க்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. நான் பார்த்தேன். மற்றவர்களின் ஆயிரக்கணக்கான நற்செயல்கள் இவரது தராசில் போடப்பட்டது. அதனால் அவர் மன்னிக்கப்பட்டார்.

4) நான் மேலும் சற்று முன்னால் சென்ற போது நரகத்தின் மலக்காகிய மாலிக்கின் பிடியில் ஒருவர் இருந்தார். அப்போது இந்த மனிதர் ஒரு குறிப்பிட்ட புத்தகம் ஒன்றின் ஆசிரியர் என்றும், பல தலைமுறையினர் இவரது புத்தகத்தின் மூலம் இஸ்லாத்தையும் நன்மையையும் அறிந்து கொண்டனர். எனவே அவரது புத்தகத்தின் காரணமாக நன்மை செய்த அனைவருக்கும் அவர்களின் நற்செயல்களுக்கு நற்கூலி கொடுக்கப்படுவதுடன் அவற்றின் காரணமாக புத்தகத்தின் ஆசிரியருக்கும் நற்கூலி தரப்படும் என்று கூறப்பட்டது. எனவே அத்தகைய நன்மைகளை பார்க்கும் போது ஏராளமான நற்செயல்கள் ஆசிரியரின் கணக்கின்

கீழ் வந்தன. மாலிக் தனது பிடியை தளர்த்தினார். சுவர்கக்த்தின் மலக்காகிய ரிஸ்வானின் உதவியாளர் இந்த ஆசிரியரை அழைத்துக் கொண்டு சுவர்க்கம் சென்றார்.

5) நான் மேலும் சென்றேன். அப்போது ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள். அவரது செயல்களின் பதிவேட்டில் தீமைகளே நிறைந்திருந்தன. எனவே விரக்தியும் நம்பிக்கையின்மையும் அவளுக்கு ஏற்பட்டது. அப்போது ஒரு குரல் கேட்டது. வரம்பு மீறி பாவம் செய்த இப்பெண் ஏதாவது நற்செயலும் செய்திருக்கிறாரா? அப்போது, கிராமன் காதிபீனின் ஒரு மலக்கு அதவாது செயல்களைப் பதிவு செய்யும் மலக்குகளில் ஒருவர் கூறினார்.

என் இறைவா! இந்த பெண் காட்டின் வழியே சென்று கொண்டிருந்த போது ஒரு நாய் தாகத்தால் தவித்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட இவள் ஒரு கிணற்றிற்குள் இறங்கி தானும் தண்ணீர் அருந்தி விட்டு தனது காலணியில் தண்ணீர் சேகரித்து வந்து அந்த நாய்க்கும் கொடுத்தாள்.

அல்லாஹ் கூறினான்: நாம் மிகச்சிறிய நற்செயலையும் மதித்து அதனை பன்மடங்காக்கி விடுகின்றோம். நாம் அவளது இந்த செயலை விரும்பினோம். எனவே இந்த நொடிப்பொழுதே அவளை மன்னித்துவிட முடிவு செய்து விட்டோம். நமது மன்னிப்பின் போர்வையில் அவளைப் போர்த்துங்கள். அவள் விரும்பிய இடத்திற்கு அவள் செல்லட்டும்.

6) நான் மேலும் சென்றேன். அப்போது ஓரிடத்தில் பெரும் கூச்சல் நிலவுவதை கண்டேன். அலங்கரிக்கப்பட்ட ஒரு நல்ல மனிதருக்கு பக்கத்தில் பணிவுமிக்க பாவம் செய்த ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். பார்க்கும்போது நல்லடியாராகத் தோன்றிய அந்த நபர், பாவம் செய்தவரைப் பார்த்து கூறினார். "இறைவன் மீது ஆணையாக, அல்லாஹ் உன்னை ஒரு போதும் மன்னிக்க மாட்டான்" என்று கூறிக் கொண்டிருந்தார். சுற்றி இருந்தவர்கள் கூறினர் "இந்த புனித மகான்" சரியாகத் தான் சொல்கிறார். ஏனெனில் அந்த மனிதனின் பாவங்கள் மன்னிக்க முடியாத அளவு மிக அதிகமாக உள்ளன. அப்போது அல்லாஹ்வின் அரியணையிலிருந்து ஒரு குரல் கேட்டது. "மனிதனே! எம்முடைய மன்னிப்பின் மீது ஆணையிடுவதற்கு நீ யார்? பாவம் செய்தவரே! நீர் மன்னிக்கப்பட்டீர். உம்மைப் பொறுத்த வரையில் நாம் பிறகு முடிவு செய்வோம். அதைக் கேட்டதும் பாவம் செய்த நபர் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தவராக சுவர்க்கத்திற்குள் சென்றார்.

7) இதைப் போன்று அடுத்து நின்று கொண்டிருந்த ஒரு கூட்டத்தினர் மீது தீர்ப்பு சொல்லப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள். ஆனால் அவர்களின் செயல்களின் பதிவேடு எந்த நற்செயலுமின்றி காலியாக இருந்தது. அவர்களின் காலத்தில் தோன்றிய நபியின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்ட போதிலும் அவர்கள் பல நற்செயல்கள் செய்யும் அளவிற்கு நீண்ட நாள் வாழவில்லை. சிலரது பதிவேட்டில் எந்த ஒரு நற்செயலும் இல்லை. இந்த மக்கள் திருக்குர்ஆனின் இந்த கட்டளையின் படி தீர்ப்பு வழங்கப்பட்டனர்.

நாங்கள் நம்பிக்கை கொண்டவர்களில் முதன்மை -யானவர்களாக இருப்பதனால் எங்கள் இறைவன் எங்களது பாவங்களை மன்னிப்பான் என்று நாங்கள் நம்புகிறோம். (26:52)

இதன் பொருள் அவர்கள் நபியை ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொண்டதனால், இதுவே அவர்களின் மன்னிப்பிற்குப் போதுமானதாகும். முஸ்லிமான பிறகு ஒரு சிறு நற்செயல் செய்ய முடியாமல் போய்விட்டாலும் சரியே.




8) பிறகு நானும் கு.ஃபரானும் மேலும் முன்னேறிச் சென்றோம். அங்கு ய.ஃகூப் (அலை) அவர்களின் பிள்ளைகளின் நியாயத் தீர்ப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்கள் தமது தந்தையின் துஆக்களின் காரணமாக மன்னிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இது குறித்த அவர்களின் விண்ணப்பம் இவ்வாறு இருந்தது. "எங்கள் தந்தையே! எங்களின் பாவங்களுக்காக பாவமன்னிப்பை வேண்டுவீராக. நிச்சயமாக நாங்கள் பாவிகள் ஆவோம்." (12:98)

இதற்கு தந்தையின் பதில் இவ்வாறாகும். "நான் நிச்சயமாக என் இறைவனிடத்தில் உங்களுக்காக பாவ மன்னிப்பு வேண்டுவேன். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும் கருணையாளனுமாவான்." (12:99)

9) நான் பின்னர் மற்றொரு இடத்தைப் பார்த்தேன். அங்கு பலர் பாவங்களால் நிறைந்திருந்தனர். அவர்களின்




மீட்பிற்கு எந்த ஒரு வழியும் இல்லாதிருந்தது. அப்போது அல்லாஹ் கேட்டான். “வலப்பக்கம் உள்ளவருக்கு ஜனாஸா தொழுதவர்கள் யார்?” அவருக்கு 40 நம்பிக்கை கொண்டவர்கள் ஜனாஸா தொழுததாக கூறப்பட்டது. அல்லாஹ் கட்டளையிட்டான். “மாலிக், இவரை அனுப்பி விடும். அந்த 40 நம்பிக்கை கொண்டவர்களின் பரிந்துரையின் பேரில் இவரை நாம் மன்னித்து விட்டோம்”. பிறகு இடப்பக்கம் இருந்த மனிதனின் முறை வந்தது. அவரது மரணத்தின் போது அவரது ஊரில் வாழ்ந்த பெரும்பான்மை மக்கள் அவர் ஒரு நல்ல மனிதர் என்று கூறியதாக அறியப்பட்டது. அல்லாஹ் கட்டளையிட்டான் அந்த மக்கள் வாழ்த்தியமைக்காக அந்த மனிதன் மன்னிக்கப்படுகிறான். பிறகு அல்லாஹ் மூன்றாவது மனிதனின் நிலை என்ன என்று கேட்டான். மலக்குகள் கூறினர். அவரது மரணத்தின் போது இரண்டு மு.்.மின்கள் மட்டுமே அவரை நல்லவர் என கருதினர். அல்லாஹ் அவரும் மன்னிக்கப்பட வேண்டும் என கட்டளையிட்டான். நான்காவது பாவியும் மன்னிக்கப்பட்டார் ஏனெனில் அவரது ஜனாஸா தொழுகையின் போது 3 ஸ.்.ப்களில் முஸ்லிம்கள் நின்றிருந்தனர்.

10) மேலும் நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது மற்றொரு பாவியான ஒரு முஸ்லிமும் மன்னிக்கப்பட்டார். ஏனென்றால் அவரது மூன்று குழந்தைகள் அவரது வாழ்வில் மரணித்திருந்தன. மற்றொரு நம்பிக்கை கொண்ட பெண் மன்னிக்கப்பட்டாள். ஏனெனில் அவளது ஒரு குழந்தையின் மரணத்தின் துயரத்தை அவள் அனுபவித்திருந்தாள். ஒரு கணவன் மனைவிக்கு நியாய தீர்ப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது இரண்டு வயது குழந்தை ஒன்று ஓடி வந்தது. அது கூறியது: இவர்கள் என் பெற்றோர்கள். இவர்கள் இல்லாமல் நான் சுவர்க்கம் செல்லமாட்டேன் என்று அது கூறியது. அந்த காட்சியைக் கண்ட அங்கிருந்தவர்களின் கண்களில் கண்ணீர் ததும்பியது. இதற்கிடையில் மற்றொரு கணவன் மனைவியின் முறை வந்தது. அப்போது ஒரு பச்சிளம் குழந்தை, அதன் தொப்புள் கொடி அதன் வயிற்றிலேயே இன்னும் இருந்தது. அது வந்து அழ ஆரம்பித்தது. “என் இறைவனே! நான் கருக்கலைந்ததால் மரணித்துவிட்ட குழந்தையாவேன். உனது கருணையினால் நான் சுவர்க்கத்தில் வாழ அனுமதிக்கப்பட்டுள்ளேன். ஆனால் என் பெற்றோர்கள் நரகத்தில் இருந்தால் நான் சுவர்க்கத்திற்கு திரும்பிச் செல்ல மாட்டேன்” என்று அழுதவாறு கூறியது. அல்லாஹ் கூறினான்: “உனக்காக உனது பெற்றோரை நாம் மன்னித்து விட்டோம். அவர்களை உன்னுடன் அழைத்துக் கொண்டு சுவர்க்கத்திற்கு செல். அந்த குழந்தை தனது தொப்புள் கொடியை பிடித்தவாறே தனது பெற்றோரை அழைத்துக் கொண்டு சுவர்க்கத்திற்குள் சென்றது. இந்த காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அங்கிருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

(தொடரும்)

---

*(22 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அளித்துள்ளார்கள். ஆகவே முதல் இரண்டும் அன்னாரின் பெயர் ஆகும். மற்ற மூன்றும் அன்னாரின் குணமாகும் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது ஆகவேதான் இதற்கு பொருள் தந்து விட்டார்கள் என்று கூறலாம். ஆனால் இந்த வாதமும் சரியானது அல்ல. ஏனென்றால் முதலில் எதற்கு பொருள் தரவில்லையோ அது கண்டிப்பாக பெயர் ஆகும் என்று கூறும் வாதம் தவறாகும். மாறாக எதற்கு மக்கள் பொருள் அறிவதில்லையோ அதற்கு மட்டுமே விளக்கம் தரப்படும். இரண்டாவது, மற்றொரு அறிவிப்பு இந்த வாதத்தை மறுத்து விடுகின்றது. அது இதுவாகும், அதாவது, அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்கள் முன் தனது பல பெயர்களை குறிப்பிட்டார்கள். அதில் சிலவற்றை நாங்கள் மறந்து விட்டோம். சில நினைவில் இருந்து விட்டன. ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள், எனது பெயர் முஹம்மது ஆகும் எனது பெயர் அஹ்மது ஆகும் எனது பெயர் முக.்.ப்பா ஆகும் ஹாஷிர் ஆகும். நபியுர் ரஹ்மஹ் ஆகும். நபியுத் தவ்பா ஆகும். மேலும் நபிய்யுல் மல்ஹமஹ் ஆகும். (முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் பாகம் 4 பக்கம் 395)

இந்த ஹதீஸில் முக.்.ப்பா, நபியுர் ரஹ்மஹ், நபியுத் தவ்பா, மேலும் நபிய்யுல் மல்ஹமஹ் என்பதற்கு விளக்கம் (பொருள்) கூறவில்லை. ஆனால் இவை யாவும் பண்புகளாகும். இன்று வரை இவற்றை யாரும் பெயர் என்று ஏற்கவில்லை. மேலும் இது பெயராகவும் இருக்க முடியாது. ஏனென்றால், அன்னாரின் பெயர் அன்னாரின் பெரியோர்களால் வைக்கப்பட வேண்டும். மேலும் அரபி மக்கள் நுபுவ்வத்தை ஏற்பவர்களாக இருந்ததில்லை. இவர்கள் எப்படி அன்னாருக்கு நபிய்யுர் ரஹ்மஹ் என்று பெயர் வைக்க முடியும்? ஆக இதில் கூறப்பட்டிருப்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அல்ல. மாறாக அன்னாரின் குணங்களே என்பதை இந்த ஹதீஸ் தாமே உரத்த குரலில் கூறுகிறது. (அனவாருல் உலூம் -பாகம்3)

(தொடரும்)

# ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை 1



மவ்லவி S. அப்துல் காதிர்

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது அருளைப் பொழிந்து கொண்டே இருக்கிறான். மலக்குகளும் (இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும், சாந்தியும், சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். (33:57)

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அரபு தேசத்தில் உள்ள மக்காவில் குறைஷி என்று அழைக்கப்பட்ட மிகவும் கண்ணியமான கோத்திரத்தில் கி.பி 571 –ஆம் ஆண்டு அப்துல்லாஹ் மற்றும் ஆமினா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்கள். அவர்கள் பிறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னரே அவர்களின் தந்தையார் அப்துல்லாஹ் மரணமடைந்து விட்டார்கள். எனவே குழந்தையாக இருந்த ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களையும் அவர்களின் தாயார் ஆமினாவையும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் தம் பொறுப்பில் கவனித்து வந்தார்கள்.

அரபு மக்கள், செவிலித்தாய் மூலம் பாலூட்டும் வழக்கத்திற்கேற்ப, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டுவதற்காக தாயிஃப் என்ற ஊரின் பக்கத்தில் வாழ்ந்து வந்த ஹலீமா என்ற அம்மையாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு ஆறு வயது இருக்கும் போது அவர்களின் தாயார் ஆமினாவும் மரணமடைந்து விட்டார்கள். பிற்காலத்தில் அவர்கள் தம் தந்தையின் சகோதரராகிய அபூதாலிபிடம் வளர்ந்து வந்தார்கள். இவ்வாறு தன் குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் தம் பெற்றோரை இழந்தவராகவும் மிகவும் ஏழ்மை மற்றும் எளிமையான குடும்பச் சூழ்நிலையிலும் வளர்ந்து வந்தார்கள்.

மக்காவிலுள்ள இனத்தவர்களும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்த இனத்தவர்களுக்குமிடையில் நடந்து கொண்டிருந்த சண்டைகளினாலும் அநீதிகள் மற்றும் அக்கிரமங்களினாலும் வெறுப்படைந்த மக்காவின் சில வாலிபர்கள், அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஹில்ஃபல் ஃபுஸூல் என்ற பெயரில் ஒரு மன்றத்தை அமைத்த போது, ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களும் மிக்க ஆர்வத்தோடு அம்மன்றத்தில் ஓர் உறுப்பினராக இணைந்தார்கள். இணைந்தது மட்டுமின்றி அபூஜஹ்ல் என்ற மக்காவின் தலைவன், ஓர் ஏழையிடம் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தாமல் ஏமாற்ற நினைத்த போது, அந்த ஏழைக்கு ஆதரவாக அபூஜஹ்லின் வீட்டுக்கே சென்று அவரிடம் வாங்கியத் தொகையை இப்போதே திரும்பச் செலுத்த வேண்டும் என்று குரல் கொடுத்து உரிமையை மீட்டுக் கொடுத்தார்கள்.

அபூஜஹ்ல் மக்கா நகரின் தலைவனாக இருந்தாலும் அவன் ஓர் அநியாயக்காரன் என்ற காரணத்தால், பொது மக்கள் தம் நியாயமான கோரிக்கைகளைக் கூட அவனிடம் சொல்லத் தயங்கினார்கள். இந்நிலையில், அந்த ஏழையின் நியாயமான கோரிக்கைக்கு மதிப்பளித்து அபூஜஹ்லின் வீட்டுக்குச் சென்று வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தச் சொன்ன போது ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தைரியம் மற்றும் உண்மை ஊர் மக்களுக்கு மத்தியில் அவர்களுக்கு இருந்த நம்பிக்கையை இன்னும் அதிகப்படுத்தியது.

அத்துடன், ஊர் மக்கள் அபூஜஹ்லிடம் இது பற்றி கேட்ட போது, “முஹம்மதை இழிவுபடுத்தி திருப்பி அனுப்பி விடுவீர் என்ற எதிர்பார்ப்போடுதான் அவரை உமது விட்டுக்கு அனுப்பி வைத்தோம். ஆனால் நீர் எதுவும் பேசாமல் அவர் கேட்ட தொகையை உடனே கொடுத்து விட்டீரே! உமக்கு என்ன ஆயிற்று?” என்று கேட்டனர். அதற்கு அபூஜஹ்ல், “முஹம்மது என்னிடம் வந்து பணத்தை அந்த ஏழையிடம் கொடுக்கும்படி கூறினார். அப்போது அவரது வலது பக்கமும் இடது பக்கமும் இரண்டு ஒட்டகங்கள் சீறிக்கொண்டு நின்றிருப்பதைப் பார்த்தேன். நான் சற்று நேரம் தாமதித்திருந்தால் கூட அந்த இரண்டு ஒட்டகங்களும் என் மீது பாய்ந்து என்னைக் கடித்து விடும் என பயந்து நான்

ஒன்றும் பேசாமல் பணத்தைக் கொடுத்து விட்டேன்'' என்று பதற்றத்துடன் கூறினான்.

உண்மையில், ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவனது வீட்டுக்கு ஒட்டகங்களை அழைத்துச் செல்லவில்லை. மாறாக, இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் நேர்மை ஆகியவற்றைக் கண்டு அபூஜஹ்லுக்கு ஏற்பட்ட திகில் உணர்வு மற்றும் அல்லாஹ்வின் உதவியே ஆகும்.

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தம் இளம் பருவத்தில் உண்மை, நேர்மை, நல்லொழுக்கம் போன்ற சிறப்பியல்புகளுக்குச் சொந்தக்காரராகத் திகழ்ந்தார்கள். வியாபாரம் செய்தால் அதில் நேர்மை இருக்கும். ஒரு பொருளை நம்பி ஒப்படைத்தால் அதை நல்ல படியாக பாதுகாத்து உரியவரிடம் திரும்ப ஒப்படைத்து விடுவார்கள் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்தது. அதற்கேற்றபடி அவர்களும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக திகழ்ந்ததால் 'சித்தீக்' (உண்மையாளர்) என்றும் 'அமீன்' (நம்பகமானவர்) என்றும் மக்களால் போற்றி பாராட்டப்பட்டார்கள்.



அரபு நாட்டில் மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலும் மனிதர்களை அடிமைகளாக வைத்து கொடுமைப்படுத்தி வேலை வாங்கும் பழக்கம் இருந்தது. இந்த அடிமைத் –தனத்தை ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அடியோடு வெறுத்தார்கள். அரபு நாட்டில், குறிப்பாக மக்காவில் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரும் புகழும் பரவிய காலத்தில் அந்நாட்டிலேயே மிகவும் செல்வச் சீமாட்டியாக இருந்த அன்னை கதீஜா (ரலி) அவர்கள் தம் செல்வத்தின் ஒரு பகுதியை வியாபாரத்திற்காக ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் கொடுத்து வியாபாரம் செய்ய அனுப்பி வைத்தார்கள். இதன் மூலம் அவர்களுக்குக் கிடைத்த இலாபம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நேர்மை, நாணயம் போன்ற நற்குணங்களைக் கண்டு ஈர்க்கப்பட்டு ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களை மணந்து கொள்ள விருப்பம் தெரிவித்தார்கள். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். திருமணத்திற்குப் பின் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அன்னை கதீஜா (ரலி) அவர்களிடம் இருந்த எல்லா அடிமைகளையும் விடுதலை செய்தார்கள்.

அத்துடன் தம்மிடம் இருந்த அனைத்துச் செல்வங் களையும் ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்கி மக்களின் துயர் துடைத்த வள்ளல் ஆனார்கள். மனித நேயம், அன்பு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றையே தானும் விரும்பி மக்களுக்கும் போதித்து வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் மீது கொண்டிருந்த அனுதாப உணர்வு, பேரன்பு மற்றும் மென்மையான நற்குணம் இவற்றைக் குறிப்பிட்டு இறைவன் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்: ''அல்லாஹ்– விடமிருந்து (உமக்கு வழங்கப் பெற்று)ள்ள மகத்தான அருளின் காரணமாக, நீர் அவர்களுக்கு மென்மை வாய்ந்தவராகத் திகழ்கின்றீர். நீர் தீய ஒழுக்கமும், கடின உள்ளமும் உடையவராக இருந்திருப்பின் அவர்கள் உம் சூழலில் இருந்து சிதறிச் சென்றிருப்பர்.'' (3:160)

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் மக்களிடையே இருந்து வந்த பிரிவினைகள், அதனால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள் மற்றும் சண்டை சச்சரவுகள், அடிமைத்தனம், பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமைகள், சமூகத்தில் நிலவிய அநீதிகள், அக்கிரமங்கள், மனித குலத்தையே சீரழிக்கும் மது, விபச்சாரம், சூதாட்டம், கொலைகள், கொள்ளைகள் இன்னும் சொல்லொண்ணா குற்றச் செயல்கள் போன்ற வற்றைச் சகித்துக் கொள்ள முடியாது; ஊரை விட்டு ஒதுக்குப்புறமாக இருந்த ஹிரா என்ற ஒரு மலைக் குகைக்குச் சென்று தன்னந்தனியாக தியானத்தில் ஈடுபடுவது அவர்களின் வழக்கமாக இருந்தது. ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு 40 வயது இருந்த போது, இறைவனின் வார்த்தைகள் அவர்களுக்கு வானவர் ஜிப்ரீல் மூலம் இறங்கத் தொடங்கின. அதுவே திருக்குர்ஆன் ஆகும்.

ஒரு ரமலான் மாதம், வழக்கம் போல் ஹிரா குகையில் இறை வழிபாட்டில் மூழ்கியிருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் திடீரென ஒரு வானவர் மனித உருவில் தோற்றமளித்து, 'நீர் ஓதுவீராக' என்று கட்டளையிட்டார். அத்துடன் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆனின் வசனங்கள் அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் என்ற வானவர் மூலம் படிப்படியாக இறங்க ஆரம்பித்தன.

நல்லொழுக்கத்தின் உச்சத்தை அடைந்திருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் தூய வசனங்களாகிய திருக்குர்ஆனையே தம் வாழ்க்கை என ஏற்று, இறுதி வரை சற்றும் நெறி தவறாமல் வாழ்ந்து காட்டினார்கள். ஆகவே, திருக்குர்ஆன் இறைவனின் சொற்கள் என்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அந்த குர்ஆனின் செயல் வடிவமாக இருந்தது.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

# ‘இஸ்முஹு அஹ்மது’ என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே!


**இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்**
**ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)**

2

**தமிழாக்கம்: மவ்லவி R. அப்துல்லாஹ்**

இஞ்சீலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை குறித்து முஹம்மது என்று வந்துள்ளது. பிறகு ஓர் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால், ஒருபுறம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது என்பதை உறுதியாக கூறுகின்றனர். மறுபுறம் இஞ்சீலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் முஹம்மது என்று வந்துள்ளது என்பதை நிரூபிக்கின்றனர். ஆனால் இஞ்சீலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயராக முஹம்மது என்று வந்துள்ளது என்று சொன்னால் பிறகு இஸ்முஹு அஹ்மது என்ற முன்னறிவிப்பை அன்னாருக்கு ஒப்பிட்டுக் கூறுவது அன்னாரை பொய்யாக்குவதாகும். ஏனென்றால், இஞ்சீல் தெள்ளத் தெளிவாக முஹம்மது என்ற பெயரைக் கொண்டு அன்னாரைப் பற்றிய செய்தியை தருகிறது. மேலும் இந்த முன்னறிவிப்பில் (திருக்குர்ஆன் 61:7) வேறோர் அஹ்மது என்ற பெயரைக் கொண்ட நபியை பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. ஆக, அந்த முன்னறிவிப்பானது வேறு; இந்த முன்னறிவிப்பானது வேறு என்பது தெளிவாக நிரூபணமாகவில்லையா? மேலும் இந்த முன்னறிவிப்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒப்பிட்டுக் கூறுபவர்கள், இஞ்சீலில் முஹம்மது என்று எழுதப்பட்டுள்ளது; ஆனால் திருக்குர்ஆனிலோ அஹ்மது என்று எழுதப்பட்டுள்ளது என்று திருக்குர்ஆன் மீது குற்றம் சுமத்துவதாக கருதப்படாதா? இவ்வாறானவர்கள் தமது இந்த செயல் தம்மை எந்த அளவுக்கு ஆட்சேபனைக்குரிய இடத்தில் கொண்டு சென்று நிறுத்தி விடுகிறது என்பதை சற்று சிந்தித்துதான் பாருங்களேன்! இவர்கள் தமது எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பொய்யானவர்களாக ஆக்கி விடுகிறார்கள்.


எந்த இஞ்சீலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முஹம்மது என்று கூறியுள்ளதோ அது பர்னபாஸின் இஞ்சீல் ஆகும். நவாப் சித்தீக் ஹஸன் கான் மர்ஹூம் போபாலவி அவர்கள் தமது த.்.ப்ஸீர் .்.பத்ஹுல் பயான் பாகம் 9 பக்கம் 335 -இல் இஸ்முஹூ அஹ்மது என்ற முன்னறிவிப்பின் அடிக்குறிப்பில் இவ்வாறு எழுதுகின்றார்கள், பர்னபாஸின்



இஞ்சிலில் எழுதப்பட்டுள்ள செய்தியில்,

لٰكِنَّ هٰذِهِ الاَهَانَةَ وَ الاِسْتِهْزَاءَ تَبْقِيَانِ اِلٰى اَنْ يَجِيْئَ مُحَمَّدٌ رَّسُوْلُ الله

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறினார்கள்: முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வருகை தரும் வரை எனது மீதான இந்த இழிவு மற்றும் கேலி கிண்டல் மீதம் இருக்கும். இந்த ஆதாரம் தற்போது நமக்கிடையில் இருக்கும் கருத்து வேறுபாடுகளுக்கு முன்புள்ளதாகும். மேலும் நவாப் சித்தீக் ஹஸன் கான் ஸாஹிப் அவர்களின் எழுதுகோலின் வாயிலாக வெளிப்பட்டதாகும். இவ்வகையில் இந்த ஆதாரமானது மிகவும் நம்பகத் தன்மைக்குரியதாக இருக்கிறது. இவ்வாதாரத்தின் வாயிலாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயர் இஞ்சீலில் முஹம்மது என்று



**❝ நீர் (எல்லா மக்களிடமும்) கூறி விடுவீராக: (இப்பொழுது) உண்மை வந்து விட்டது. பொய் ஓடி விட்டது. பொய்யானது ஓடி விடக் கூடிய ஒன்றேயாகும். (17:82)**

இருந்தது என்பது நிரூபணமாகிறது. ஆகவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயராக இஞ்சீலில் ஒன்று வந்துள்ளது என்று சொன்னால் அது முஹம்மது ஆகும். பிறகு இதற்கு நேர் எதிராக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இவ்வசனத்தை (61:7) ஒப்பிட்டுக் கூறுவதற்கான காரணம்தான் என்ன? இதனால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இழிவுபடுத்துவதாக ஆகாதா!? முதலாவதாக, இஞ்சீலில் ஒரு பெயரைக் கொண்டு செய்தி அறிவித்துள்ளான். ஆனால் திருக்குர்ஆனில் அந்த பெயரையே மாற்றி விட்டான் என்று இறைவன் மீதே குற்றம் சுமத்துவதாக ஆகி விடாதா!? இரண்டாவது, (இவ்வசனத்தில்) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு ஒப்பிட்டுக் கூற முடியாத அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன.

***ஃபார்கலீத் (Paraclete):*** நமது எதிரிகள் நம்மோடு பேசும் போது மற்றொரு வழியையும் கையாளுகின்றனர். அது என்னவென்றால், இஞ்சீலில் கூறப்பட்டுள்ள ஃபார்கலீத் என்ற செய்தியைக் கொண்டு இஸ்முஹூ அஹ்மது என்ற முன்னறிவிப்பை நிரூபிப்பதற்கு முயற்சி செய்வார்கள். மேலும் ஃபார்கலீத் மூலம் அஹ்மது என்ற பெயர் நிரூபணமாகிறது என்று கூறுகின்றனர். இஸ்முஹூ அஹ்மது என்ற முன்னறிவிப்பானது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பொருத்திக் கூற முடியாத போது ஃபார்கலீத் முன்னறிவிப்பானதும் அன்னாருக்கு பொருந்தாது. அதுவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கே பொருந்தும். இந்நிலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை குறித்து இஞ்சீலில் எந்த முன்னறிவிப்புதான் மீதமிருக்கும்!?

இதற்கான பதில் என்னவென்றால், ஃபார்கலீத்-ஐ குறித்த முன்னறிவிப்பானது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை குறித்தே வருகின்றது. மேலும் எமது பார்வையில் இந்த முன்னறிவிப்பிற்கு பொருத்தமானவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே ஆவார்கள். ஆனால், ஃபார்கலீத் என்பதற்கு அஹ்மது என்று மொழிபெயர்க்கவில்லை என்றால் இம்முன்னறிவிப்பானது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பொருந்தாது என்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக எமது பார்வையில் இம்முன்னறிவிப்பானது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பொருந்துகிறது. மேலும் எவர்கள் ஃபார்கலீத் என்பதன் பொருள் அஹ்மது என்று கூறி இந்த முன்னறிவிப்பை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பொருத்திக் கூறுகிறாரோ அவர்கள் தன்புறத்திலுள்ள சான்றை பலவீனமாக்குகிறார்கள். ஏனென்றால், அஹ்மது என்பதற்கு மொழிபெயர்ப்பாக Periclytos என்ற சொல் தரப்படுகின்றது. நவீன கிரேக்க பிரதியில் Periclytos என்ற சொல்லே இடம் பெற்றிருக்கிறது. ஆகவே எந்த சொல்லின் மூலம் அஹ்மது என்பதற்கு பொருள் தரப்படுகிறதோ அந்த சொல் (ஃபார்கலீத்) தற்போதுள்ள இஞ்சீலில் இல்லவே இல்லை. மேலும் முன்புள்ள காலத்தைப் பற்றி, இந்த சொல் இருந்ததா இல்லையா? என்று வாதிக்கப்படுகிறது. ஆகவே, சாட்சிகளே இல்லாத ஒரு சொல்லை அடிப்படை ஆதாரமாக வைத்து பேசுவது பலவீனமானதாகும். மேலும் இஞ்சீல் திரித்து எழுதப்பட்டுள்ளதால், அதில் சிலர் கருதி வந்த இதே சொல்லே முதலில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுவது மட்டும் போதுமானதாக அமையாது. ஏனென்றால் இது இவ்வாறு இல்லை இது அவ்வாறு என்று ஒரு நபர் இஞ்சீலின் ஒரு வசனத்தை எடுத்து பேச முடியும். மேலும் இஞ்சீல் திரித்து எழுதப்பட்டுள்ளதால் நான் என்ன கூறுகிறேனோ அவ்வாறே ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற ஓர் ஆதாரத்தை அவரால் தர முடியும். திரித்து எழுதப்பட்டுள்ளது என்பது வேறு. குறிப்பிட்ட ஓர் இடம் திரித்து எழுதப்பட்டுள்ளது என்று நிரூபிப்பது வேறொன்றாகும். ஆகவே எந்த இடத்தில் திரித்து எழுதப்பட்டுள்ளது என்று நிரூபிக்காத வரை, தம்மிடமிருந்து ஒரு புது கருத்தை இஞ்சீலில் புகுத்த முடியாது. மேலும் அசல் இதுவாகும் என்றும் கூற முடியாது.

எனினும் இவ்வாறு செய்வதற்கு நமக்கு எந்த அவசியமும் இல்லை. ஏனென்றால், ஃபார்கலீத் என்பது

ஒரு ஹீப்ரு மொழிச் சொல்லாகும். மேலும் இது ∴பாரக் மற்றும் லீத் என்ற இரு சொற்கள் சேர்ந்து வரும் சொல்லாகும். ∴பாரக் என்றால் விரட்டுபவன் என்றும், லீத் என்றால் ஷய்த்தான் அல்லது பொய் என்று பொருள் ஆகும். இந்த பொருளின் அடிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்புக்கு பொருத்தமானவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால், அன்னாரே ஆன்மீக ஆயுதங்களைக் கொண்டு ஷய்த்தானை விரட்டியடித்தார்கள். மேலும் பொய்யினை துண்டு துண்டாக்கினார்கள் மற்றும் உலகத்தில் இறைவன் புறமிருந்து, وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ۖ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا நீர் (எல்லா மக்களிடமும்) கூறி விடுவீராக: (இப்பொழுது) உண்மை வந்து விட்டது. பொய் ஓடி விட்டது. பொய்யானது ஓடி விடக் கூடிய ஒன்றேயாகும். (17:82) என்ற முழக்கத்தை உரத்த குரலில் முழங்கினார்கள். ஆகவே எந்த சொல் கருத்து வேறுபாட்டில் இருக்கிறதோ அதனை நாம் ஏன், நமது ஆதாரத்திற்காக எடுத்து கொள்ள வேண்டும்? ∴பார்கலீத் என்பது அசல் சொல்லாகும். இதன் அடிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெயர் அஹ்மது என்று இருந்தாலும் இல்லாவிட்டாலும் அன்னார் இந்த முன்னறிவிப்பிற்கு பொருத்தமானவர்களாகத் திகழ்வார்கள். அது மட்டுமல்லாமல் தற்போது கிரேக்க மொழியில் மொழியாக்கம் செய்யபட்டுள்ள பிரதியில் ஆய்வாளர்கள் நிம்மதி தரக்கூடிய அறிவு பெற்ற அரசன் அல்லது தூய ஆன்மா என்று மொழிபெயர்க்கும் Periclytos என்ற சொல்லை ஒரு வாதத்திற்கு ஏற்றுக் கொண்டாலும் எமக்கு எந்த வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்குப் பிறகு வந்த நிம்மதி அளிப்பவர் யார்? அல்லது யார் يُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ என்ற வாதத்தை செய்தார்? அல்லது யாருக்கு இறைவன் பொதுமக்களிடம் இதற்கு முன்பு வந்த நபிமார்களிடம் காணப்படாத நடைமுறையான பைஅத்தை வாங்குவதற்கான கட்டளையை வழங்கினான்? பைஅத் என்றால் விற்று விடுதல் என்று பொருளாகும். ஆகவே அவர் அரசராகவும் இவ்வாறு திகழ்கிறார்கள். அதுமட்டுமின்றி, பின்னாளில் அவரது அடிமைகளும் அரசனானார்கள். பிறகு உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை தூய்மையாகத் திகழ்ந்தவர், முழு உலகிற்கும் அழகிய முன்மாதிரியாக அல்லாஹ் யாரை நிர்ணயித்தான்? நமது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) (எனது தந்தையும் தாயும் அவர்கள் மீது அர்ப்பணமாகட்டும்) அவர்களிடம் இவை அனைத்தும் இருந்தன என்பது தெளிவானதொன்றாகும். இவ்வாறான வாதம் செய்தவர் இவர்கள் ஒருவர் மட்டுமே ஆவார்கள். மேலும் அவர் எப்போதும் மக்களுடன்



இருப்பார் என்ற ∴பார்கலீத்தின் நிபந்தனையை நிறைவேற்றுவதற்காக இறுதி நாள் வரை மனித குலத்திற்காக அனுப்பப்பட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தவிர்த்து வேறு எந்த நபியின் மீது, ஈமான் கொள்வதும் அவரின் கட்டளையைப் பின்பற்றி நடப்பதும் இறுதி நாள் வரை அவசியமுடையதாக இருக்கிறது?

ஆகவே, இஸ்முஹூ அஹ்மது என்பதுடன் ∴பார்கலீத் முன்னறிவிப்பிற்கு எந்த சம்பந்தமும் இல்லை. எதுவாக இருந்த போதிலும், இந்த (∴பார்கலீத்) முன்னறிவிப்பானது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்தே வருகின்றது. அதன் பொருள் அஹ்மதிற்கேற்ப இருந்தாலும் அல்லது அதை தவிர்த்து வேறொன்றாக இருந்தாலும் சரியே. மேலும் இதன் பொருள் அஹ்மதிற்கேற்ப இருக்கிறது என்று எடுத்துக் கொண்டாலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அஹ்மது என்ற பண்பைப் பெறாமல் இருந்தார்களா என்ன? இதனை யாராலும் மறுக்கத்தான் முடியுமா? மாறாக இஞ்சீலில் ∴பார்கலீத் என்ற சொல் வருவதனால் இங்கு பண்பைக் குறித்த பொருளே என்பது நிரூபணமாகின்றது. ஏனென்றால், பெயருக்கு பொருள் கொடுக்க முடியாது. ஆம், பண்புகளுக்கு பொருள் தர முடியும். ஆகவே இந்த முன்னறிவிப்பில் அன்னாரின் அஹ்மதிய்யத் என்ற பண்பைக் குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்று ஏற்றுக் கொண்டாலும், பிறகு ∴பார்கலீத் என்ற முன்னறிவிப்பில் இஸ்முஹூ அஹ்மது என்ற முன்னறிவிப்பைக் குறித்து சுட்டிக் காட்டப் பட்டுள்ளது என்று எவ்வாறு அறிய முடியும்.? நாம் இந்த இரு முன்னறிவிப்பும் ஒரே நபரை குறித்தே கூறப்பட்டுள்ளது என்று புரிவதற்காக நிர்பந்தத்தில் தள்ளப்படும் அளவிற்கு, இவ்விரு முன்னறிவிப்பிலும் எவ்வித தொடர்பும் ஆதாரங்கள் மூலமாக நிரூபணமாகவில்லை.

எனக்கு எதிராக சிலர் புகாரியில் வரும் இந்த ஹதீஸை எடுத்து வைக்கலாம். அதாவது ஹஸ்ரத்

நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு பல பெயர்கள் இருக்கின்றன. எனது பெயர் முஹம்மது ஆகும். எனது பெயர் அஹ்மது ஆகும். எனது பெயர் மாஹி ஆகும். அதாவது அல்லாஹ் என் மூலமாக கு.்.ப்ரை அழிப்பான். எனது பெயர் ஹாஷிர் ஆகும். அதாவது என் மூலமாகவே (மக்கள்) ஒன்று திரட்டப்படுவார்கள். மேலும் எனது பெயர் ஆகிப் ஆகும். ஆகிப் என்றால் அவருக்குப் பிறகு எந்த நபியும் கிடையாது என்பதாகும்.

பைஅத் செய்யாதவர்கள் (கைர் முபாயீன் - லாஹூர் பிரிவினர்) இந்த ஹதீஸின் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மதாக இருந்தது என்பது தெரிய வருகிறது என்று கூறுகின்றார்கள். இது எவ்வாறான விஷயம் என்றால், ஆரிய சமாஜத்தைச் சார்ந்த ஒருவர் திருக்குர்ஆனில் இறைவனை குறித்து அவன் மகர் (ஏமாற்றுதல்) செய்பவன் ஆவான் என்று வருகிறது. இதனால் முஸ்லிம்களின் இறைவன் மக்கார் (ஏமாற்றுபவன்) ஆவான் என்பது நிரூபணம் ஆகிறது என்று கூறுவது போல் இருக்கிறது. பொதுவாக ஆரிய சமாஜைச் சார்ந்தவர்களுக்கு, மகர் எனும் சொல்லை உருது மொழியில் உபயோகித்தால் அது தவறான பொருளில் கையாளப்படுகிறது என்பதும் அது அரபி மொழியில் தவறான அர்த்தத்தில் கையாளப்படுவ -தில்லை என்பதும் தெரியாது. ஆகவேதான் அவர்கள் இதனை ஓர் ஆட்சேபனைக்குரியதாகக் கருதுகிறார்கள். அரபியில் மகர் என்றால் திட்டம் தீட்டுபவன் என்று பொருள். திருக்குர்ஆன் அரபி மொழியில் உள்ளது. ஆகவே மகர் என்பதற்கு அரபியில் கையாளப்படும் பொருளைத்தான் தர வேண்டும். அல்லாமல் உருது மொழியில் அல்ல. இதே கருத்துதான் இங்கும் உள்ளது. இவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது இந்த ஹதீஸில் அஸ்மா என்ற சொல் வந்துள்ளது. உருது மொழியில் இஸ்ம் என்றால் பெயர் என்ற பொருளில் கூறப்படும். ஆகவே அவர்கள் இவையாவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர்களே என்று கருதி விட்டனர். ஆனால் அரபியில் இஸ்ம் என்ற சொல் பண்பிற்காகவும், பெயருக்காகவும் வருகின்றது. இஸ்ம் என்பதற்கு இரு பொருள் இருக்கும்போது அதில் எதனை இங்கு பாவிக்க வேண்டும் என்பதை அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். திருக்குர்ஆனில் இஸ்ம் என்ற சொல் பண்பிற்காக வந்துள்ளது. உதாரணத்திற்கு அல்லாஹ் கூறுகின்றான், லஹுல் அஸ்மாவுல் ஹுஸ்னா (அல்-ஹஷ்ர் வசனம் 25) அதாவது அனைத்து நற்பெயர்களும் இறைவனுக்கு உரியதாகும். ஆனால் இறைவனுக்கென்று ஒரே பெயர் தான் உள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. அதாவது அல்லாஹ் என்பதாகும். மற்ற அனைத்தும் குணப்பெயர் ஆகுமேயன்றி தனிப்பெயர் அல்ல. ஆக, திருக்குர்ஆனில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், இஸ்ம் என்பது பண்பிற்காகவும் வருகின்றது. மேலும், திருக்குர்ஆனில் சி.்.பாத்தே இலாஹிய்யா என்ற சொல்லே வரவில்லை. அனைத்து பண்பைக் குறித்தும் அஸ்மா என்றே கூறப்பட்டுள்ளது. ஆக, இஸ்ம் என்ற சொல் பண்பின் பொருளில் வரும்போது பிறகு ஹதீஸைப் புரிந்து கொள்வதில் நமக்கு எந்தக் கஷ்டமும் இருப்பதில்லை. இதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்கு இத்தனை பண்புகள் இருக்கின்றன என்று தனது பண்புகளை வரிசைப்படுத்தியுள்ளார்கள். நான் முஹம்மது ஆவேன் அதாவது இறைவன் என்னைப் புகழ்ந்துள்ளான். நான் அஹ்மது ஆவேன். அதாவது என்னைத் தவிர வேறு எவரும் இறைவனை அதிகம் புகழ்ந்ததில்லை. நான் மாஹி ஆவேன். அதாவது என் மூலமாகவே இறைவன் கு.்.ப்ரை அழிப்பான். நான் ஹாஷிர் ஆவேன். அதாவது என் மூலமாகவே (மக்கள்) ஒன்று திரட்டப்படுவார்கள். நான் ஆகிப் ஆவேன். அதாவது எனக்குப் பிறகு ஷரீஅத்துடைய நபி கிடையாது.


இந்த ஹதீஸிற்கு ஏற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அஹ்மது என்று வைத்தால் பிறகு அன்னாரின் பெயர் மாஹியாகவும் இருந்தது, ஹாஷிராகவும் இருந்தது, ஆகிபாகவும் இருந்தது என்று ஏற்க வேண்டியது வரும். ஆனால் அனைத்து முஸ்லிம்களும் கடந்த 1400 வருடங்களில் மாஹி, ஆகிப் மற்றும் ஹாஷிர் இவை யாவும் அன்னாரின் குணப் பெயராக இருந்ததே அன்றி பெயராக இருந்ததில்லை என்பதை தொடர்ந்து ஏற்று வருகின்றனர். ஆக, ஒரே சொல் (அஸ்மா) ஐந்து பெயர்களுக்காகவும் வந்துள்ளது. இதன் பிறகு ஓரிடத்தில் இதற்கு பெயர் என்ற பொருளில் அர்த்தம் கொண்டு விட்டு, மற்ற சொல்லை குறித்து அந்த சொல்லிற்கு பொருளாக குணத்தை பாவிப்பதில் எக்காரணமும் இருக்க முடியாது.

ஆக இவ்விடத்தில் அஸ்மா என்பதற்கு பெயர் என்று பொருள் கொண்டால், பிறகு ஐந்தையும் பெயராகவே கருத வேண்டியது வரும். ஆனால் இது முழுக்க தவறானதாகும். இதற்கு குணம் என்ற பொருளை கொண்டால், பிறகு இந்த ஹதீஸின் வாயிலாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குணப்பெயர் அஹ்மது என்றும் இருந்தது என்பது நிரூபணமாகும். மேலும் இதனை யாரும் மறுக்க முடியாது. மாறாக இதனை மறுப்பவர் மு.்.மீனாக கூட இருக்க முடியாது. ஒருவேளை எவரேனும் இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஹம்மது மற்றும் அஹ்மதிற்கு விளக்கம் தரவில்லை. மற்ற மூன்று பெயருக்கு விளக்கம்

*(தொடர்ச்சி 16-ஆம் பக்கம்...)*

*(9 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அல்லாஹ் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டவர்களின் ஓர் அடையாளமாவது, அவர்கள் ஆன்மீகக் குருடர்களும் செவிடர்களும் படிப்பது போன்று இறை கட்டளைகளைப் படிக்க மாட்டார்கள். எனவே ஒவ்வொரு நம்பிக்கையாளரின் கடமை என்னவெனில், அவர் இஸ்லாத்தின் அனைத்துப் போதனைகளின்படியும் கட்டளைகளின்படியும் செயலாற்ற முயற்சிக்க வேண்டும். ஏனெனில் இறை கட்டளைகளைப் புரிந்து கொள்ளும் சக்தியும், தகுதியும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு உள்ளது. ஆனால் நிராகரிப்பாளர்களோ குருடர்களாகவும் செவிடர்களாகவும் இருப்பர். இதுவே அவர்களின் அடையாளமாகும். அவர்களின் ஆன்மீகத் தகுதிகள் ஓரிடத்தில் நின்று விடுகின்றன. தூய இறையச்சம் தரும் போதனைகளைக் கேட்டு, அதன்படி செயலாற்றும் தகுதியோ ஞானமோ அவர்களுக்கு இருப்பதில்லை. நீங்களோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராகிய காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். எனவே நன்மையானவற்றை விட்டு விடுவது உங்களால் ஒருபோதும் முடியாது. இதுவே அஹ்மதி ஆண்களின் நிலையுமாகும்.



துரதிஷ்டவசமாக சந்தேகத்திற்கு இடமின்றி இந்த விஷயங்கள் மீது கவனம் காட்டுவதில் முக்கியமான குறைபாடு தோன்றியுள்ளது. இன்றைய எனது நினைவூட்டலால் நீங்கள் இவ்விஷயத்தின் பக்கம் முழு கவனம் செலுத்துவீர்கள் என நான் நம்புகிறேன். மேலும் அதனால் ஆன்மீக புத்துயிர் பெறுவீர்கள் என்றும் நம்புகிறேன் – இன்ஷா அல்லாஹ். எனவே நான் நம்பிக்கை கொள்கிறேன்; மேலும் எதிர்பார்க்கிறேன். அஹ்மதிப் பெண்களும் தற்போது தம்முடைய உண்மையான அந்தஸ்தை உணர்ந்தவர்களாகி இந்த உலகின் பகட்டுகளும், பளபளப்புகளும் மேலோட்டமான தற்காலிக விஷயங்களே என்பதைப் பற்றிய ஆழமான அறிவைப் பெற்றவர்களாகி விட வேண்டும். இந்த எல்லா மேலோட்டமான விஷயங்களும் தற்காலிகமான இந்த உலகத்திலேயே விட்டு விடப்படும். உண்மையான நிரந்தரமான வாழ்வோ மறுமை வாழ்க்கையே ஆகும். அந்த நிரந்தர வாழ்வின்போதுதான் நாம் இவ்வுலகில் செய்த நற்செயல்களுக்கான கனிகள் கிடைக்கும்.

சில பெண்களிடமிருந்து சில குமரிப் பெண்களிடமிருந்து எனக்கு கடிதங்கள் வருகின்றன. சில காலம் வரை நாங்கள் உலகாதாய விஷயங்களின் மேலோட்டமான அம்சங்களில் சிக்கியிருந்தோம். தற்போது இது மிகப்பெரிய தவறு என்பதை அறிந்து கொண்டோம். அவர்கள் எழுதுகின்றனர். இவ்வுலகில் அவர்களுக்கு கிடைத்த எல்லாவற்றையும் இழந்து விட்டனர். அதே நேரத்தில் இறைவனின் கோபத்தையும் சம்பாதித்துக் கொண்டனர். மேலும் சில ஆண்களும், பெண்களும் மிகுந்த துயரத்துடனும், வருத்தத்துடனும் தமது பிள்ளைகளின் நிலைமைகளைக் குறித்து எழுதுகின்றனர். துயரம் நிறைந்த உள்ளத்துடன் எழுதுகின்றனர். அதாவது அவர்களின் பிள்ளைகள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றது மட்டுமல்ல; பெற்றோரின் சொல்லைக் கேளாமலும் கீழ்ப்படியாமலும் இருக்கின்றனர். எனவே காலம் கடந்து விடும் முன்னரே, உலக விஷயங்களில் நீங்கள் முற்றிலும் மூழ்கி விடும் முன்னரே உங்களது உள்ளத்தை அல்லாஹ்வுடன் முற்றிலும் இணைத்துக் கொள்ள வாருங்கள். அவனோடு இணைந்திருங்கள்; எப்போதும் பிரிந்து விடாதீர்கள். அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்ற இறை வணக்கத்தை நிலைநாட்டி வாருங்கள்; திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளைகளையும் மிக முக்கியமானவை –யாகக் கருதி உங்களால் முடிந்த அளவுக்கு அமல் செய்து வாருங்கள். உங்களது வெளித்தோற்றம் இறைவன் கற்பித்த போதனைகளின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஏனெனில் இதனால் உங்களது இவ்வுலகமும் மறுவுலகமும் சீராகி விடும். பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கும் அஹ்மதிப் பெண்கள் தமது பொறுப்புகளைக் குறித்து கூடுதல் கவனம் கொள்ள வேண்டும். ஏனெனில் பின்னால் இணைந்தவர்களைக் காட்டிலும், உங்களது இரத்தத்தில் அஹ்மதிய்யத் நீண்ட காலமாகக் கலந்துள்ளது. எனவே புதிதாக இணைபவர்களுக்கும், இங்கிருக்கும் அஹ்மதிப் பெண்களுக்கும் நீங்கள் பளிச்சிடும் முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும். நீங்கள் திருக்குர்ஆனின் ஒன்று அல்லது இரண்டு கட்டளைகளின் முன்மாதிரிகளாக இல்லாமல் திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளைக்கும் முன்மாதிரியாக ஆகி, ஓர் ஒளிச்சுடரைப் போன்று உங்களைச் சுற்றியிருக்கும் அனைத்து அஹ்மதிப் பெண்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

இங்கிருக்கும் உள்ளூர் அஹ்மதிப் பெண்களிடம் நான் கூறுகிறேன். உங்களில் சிலர் நீண்ட காலமாக அஹ்மதிகளாக உள்ளீர்கள். உங்கள் குழந்தைகளும், பேரப்பிள்ளைகளும் அஹ்மதிகளாக உள்ளனர் – மாஷா அல்லாஹ். எனவே பாகிஸ்தானின் அஹ்மதிகள் மட்டுமல்ல; நீங்கள் அனைவரும் பிறருக்கு முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும். புதிதாக இணைந்தவர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பழைய அஹ்மதிகள் ஆன்மீகமான புரட்சிகரமான மாற்றங்களைத் தம்மிடத்தில் ஏற்படுத்தா விட்டால், அது நீங்கள் அவ்வாறு செய்வதை விட்டும் தடுக்கக் கூடாது. எனவே,

எவர்கள் புதிதாக இணைந்துள்ளார்களோ அவர்கள் ஓர் ஆன்மீகப் புரட்சிக்கு வழிகோலுபவர்களாக மாறி, வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் உண்மை இஸ்லாத்தின் அடையாளமாகத் திகழ வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். தூய்மையில் முன்னேறுபவரையும், அவனோடு நெருங்கி தொடர்பு வைப்பவர்களையும் அல்லாஹ் நேசிக்கின்றான். அல்லாஹ்வுக்கு பழைய அல்லது புதிய அஹ்மதிகளுடன் எந்த உறவும் கிடையாது. ஆனால் அவன் தூய இறையச்சமுள்ளவர்களை நேசிக்கின்றான். எனது வார்த்தைகள் உங்களது இறையச்சத்தின் தரத்தை உயர்த்தச் செய்வானாக. அதன் மூலம் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் விதைகள் மிக அழகுடன் நமது எதிர்கால சந்ததிகளிடம் பூக்களாக மலரச் செய்வானாக. தொடர்ந்து அவ்வாறு நிகழச் செய்வானாக. அல்லாஹ் இதனை ஏற்படுத்துவானாக. தற்போது நீங்கள் என்னுடன் துஆ செய்ய வாருங்கள்.

*(18-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*


வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதனுக்கு அருளப் பெற்ற – அதாவது, முழுமையான மனிதனுக்கு அருளப் பெற்ற உயர் தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியிலுள்ள கடல், ஆறு ஆகியவற்றிலும் இருந்ததில்லை. இது மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றிலும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம் அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்.


எனவே அந்த ஒளி அவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் பண்புகளை சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது. மேலும் இந்த சிறப்பு முழுமையாகவும், நிறைவாகவும், உயர்வாகவும், நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், நம் வழிகாட்டியும், கல்வி கற்காத நபியும், உண்மையானவரும், உண்மையாளர் என உறுதி செய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே இருந்தது. (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 160–162)

இங்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முழுமையான மனிதர் என்று ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களைக் குறிப்பிடுகிறார்கள்.

(தூய வாழ்க்கை தொடரும்...)




படித்து
பயன்
பெறுவீர்!




இஸ்லாம் பெண்களுக்கு எந்த அளவு உயரிய அந்தஸ்தை வழங்கியுள்ளது என்பதை திருக்குர்ஆன் வசனங்கள் மூலம் விளக்குகின்ற ஓர் அரிய நூல்

உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தை அறிமுகப்படுத்தும் ஓர் அரிய நூல்

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam